விலை சதம் 20. தொலைபேசி 23411

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, மாசி 27 உ (11-3-71) யைாழன் முஹர்ரம் பிறை 13 புத்தகம் 25 இதழ் 17

'ஆபத்து காலத்தில் துணிவும், பணம் வந்த போது அடக்கமும், சபையின் முன் சொல் திறமையும், போரில்வீரமும், புகழைத் தேடிச் செல்லாமலும், நூல்களைக் கற்க விருப்பம் கொள்வதும் நற்குணவான்களின் இயல்பாகும்!
'ஆன்ரேர் மொழி '

மில்க் வைற் சோப் மேலுறைகள் 10 வீதம் அனுப்பி அறிவு நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை,
த. பெ. இல. 77,
யாழ்ப்பாணம்.

# தமிழ்த் துரோகிகளுக்கு உதை

தமிழ் பேசும் மக்களுக்கும், தாம் சார்ந்துள்ள தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கும் துரோகமிழைத்து அரை அமைச்சர் பதவிக்காக தமிழ் விரோத ஆட்சியான இன்றைய அரசாங்கத்துக்கு மண்டியிட்டு வால் பிடித்து அதனுடன் இரண்டறக் கலக்கப் போவதாக தம்பட்டம் அடித்துவந்த திருவாளர்கள் ஆ. தியாகராசா ஆனந்தசங்கரி, அருளம்பலம் ஆகிய கோடரிக் காம்புகளுக்கு அரசாங்கத்திடமிருந்து நல்ல 'உதை' கிடைத்திருப்பதாக தெரிய வருகிறது.

இந்த மூன்று பேரும் என்னதான் அரசாங்கத்தின் கால்களை நக்கி திரிந்தாலும், இவர்களை சேர்த்துக்கொள்வதில்லையென அரசாங்கப் பாராளுமன்றக் குழு அண்மையில் முடிவு செய்துள்ளதாம்.

தாம் பிறந்த இனத்தையும் பேசும் மொழியையும் காட்டிக்கொடுத்து மாற்றார் தாளில் மண்டியிட நினைத்த இத்துரோகத் தம்பிரான்களுக்கு அரசாங்கத்தின் முடிவு சரியான சவுக்கடி என்று கருதப்படுகிறது;

இம்மாதம் 6ந் திகதி மாலை அரசாங்கத்துடன் இணைவது சம்பந்தமாக பேசுவதற்கு அமைச்சர் குமாரசூரியருடன் பிரதமரை இந்த மூன்று பேரும் சந்திக்க விருப்பதாக நாளேடுகளில் செய்திகள் வெளிவந்தது தெரிந்ததே. ஆனால் பின்னர் இந்தச் சந்திப்பு நடைபெறவில்லை.

அரசாங்கப் பாராளுமன்றக் குழுவின் முடிவுக்கு விரோதமாக இவர்களை அரசாங்கத்துடன் சேர்த்துக் கொள்ள முடியாதென்று கூறி இவர்களைச் சந்திக்க பிரதமர் மறுத்துவிட்டதாகத் தெரிகிறது—

தமிழ்த் துரோகிகளுக்கு அரசாங்கம் போட்ட பட்டை நாமம் கண்டு மகிழ்ச்சியடைகிறோம். இன்னும் இன்னும் மானம் கெட்டு அரசாங்கத்தின் காலைப்பிடித்து கொண்டு இவர்கள் மூவரும் திரியப்போகிறார்களா. அல்லது தன்மானத் தமிழர்களாக தமிழ்க் குலத்தின் உரிமைக் குரலை ஒலிப்பதில் ஏனைய தமிழ் பா. உ.க்களுடன் இணைந்து செயல்பட போகிறீர்களா என்பதை தமிழ் மக்கள் அவதானித்து வருகிறார்கள்.

## தமிழ்மொழிச் சட்ட விதிகள் நடைமுறைக்கு வராது!

### நாடாளுமன்றத்தில் பீலிக்ஸ் அறிவிப்பு!

1966ம் ஆண்டின் தமிழ் மொழிச் சட்டவிதிகளை அரசாங்கம் இரத்துசெய்வதா இல்லையா என்பது பற்றி எதுவித முடிவுக்கும் வரவில்லை. ஆனால் முந்திய யூ. என். பி. அரசாங்கம் இச்சட்டவிதிகளை எப்படி நடைமுறைப் படுத்தாது புறக்கணித்து வந்ததோ அதே போலவே இந்த அரசாங்கமும் அதை நடைமுறைப்படுத்துவதில்லையென்ற கொள்கையை கடைப்பிடித்துவருகிறது.''

—இவ்வாறு இம்மாதம் 6ம் திகதி நாடாளுமன்றத்தில் அழுத்தம்திருத்தமாக கூறியிருக்கிறார் உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா.

தமிழ்மொழிக்கு எந்த புதிய உரிமைகளையும் இந்த அரசு வழங்கப்போவதில்லையென்பதையும், ஏற்கெனவே உள்ள சட்டவிதிகளை கூட அமுல் நடத்தப்போவதில்லையென்பதையும் இப்பதில் தெளிவாகக் காட்டிவிட்டது;

முந்திய யூ. என். பி. அரசாங்கம் தமிழ்மொழி சட்ட விதிகளை அமுல் நடத்தத்தவறியமையினாலேயே தமிழரசுக்கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறியது. தமிழ் மக்கள் கடந்த தேர்தலில் யூ. என். பி.யை தோற்கடித்தார்கள்: முந்திய அரசின் தவறையே தாமும் பின்பற்றுவதாக இன்றைய அரசும் கூறுவதானால், தமிழுக்கு தாம் ஏதோ வெட்டிப்பிடுங்

(11-ம் பக்கம் பார்க்க)

## ஈழநாடு ஆசிரியர் மீது குமாரசூரியர் பாய்ச்சல்!

சுதந்திரனைவிட மோசமாக 'பொய்கள்' எழுதுவதாக ஈழநாடு ஆசிரியர் திரு கே. பி. ஹரன் மீது பாய்ந்தார் ராம்தபாலமைச்சர் திரு.செ. குமாரசூரியர். இச்சம்பவம் இந்திய தமிழ் பத்திரிகைகளை தடை செய்வது சம்பந்தமாக அண்மையில் அமைக்கப்பட்ட 'குமாரசூரியர்குழு' கூட்டத்தின் போது நடைபெற்றதாம். இக்குழுவில் ஈழநாடு ஆசிரியர் திரு. கே. பி ஹரனும் ஒருவர் என்பது தெரிந்ததே;

'சுதந்திரனை விட மோசமாக—மட்டமாக ஈழநாடு எழுதுகிறது, 'தரப்படுத்தல்' பற்றி திரு நேசையா எழுதிய தப்பும் தவறுமான கட்டுரைகளை ஈழநாட்டில் எப்படிப் பிரசுரித்தீர்கள்? இக்கட்டுரையில் கூறப்பட்டிருப்பது உண்மையா பொய்யா என்பதை ஆராய வேண்டாமா? கல்வியமைச்சுக்கு எழுதி இது உண்மையா அல்லவா என்பதை தெரிந்து கொண்டல்லவா பிரசுரித்திருக்கவேண்டும்?'

(11-ம் பக்கம் பார்க்க)

## தோல் பொருட் சாலையா? சிங்களக் கலாசார சாலையா?

திருகோணமலையில் இயங்கும் தொல் பொருட்சாலை உண்மையிலேயே தொல் பொருட்சாலைதானா இல்லையேல் பௌத்த சிங்களக் கலாச்சாரசாலையா என்ற கேள்வி பொதுமக்களிடையே எழுந்துள்ளதோடு அச்சாலையில் அந்நாட்டின் தேசிய மொழிகளிலொன்றான தமிழுக்கு இடமொதுக்கப்படாதது வாலிபர்கள்

(11-ம் பக்கம் பார்க்க)

## என் இரத்தமும் சதையுமாகிய ஈழத்தமிழனே வெற்றியுனதே!


### சாலை இளந்திரையன் கடிதம்!

ஈழத் தமிழ் கட்சிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள ஒற்றுமை குறித்து பரவசப்பட்டு பாராட்டி தில்லிப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர் சாலை இளந்திரையன் எம்.ஏ., எம். லிட், பி. எச். டி, டிப்புளோமா U.N.I.U. அவர்கள் உணர்ச்சிகரமான கடிதம் ஒன்றை சுதந்திரன் ஆசிரியருக்கு எழுதியுள்ளார். ஈழத்தமிழர்களின்பால் அவர் கொண்டுள்ள பேரன்பை விளக்கிடும் அந்த உணர்ச்சி சொல்லோவியத்தை இதோ கீழே தருகிறோம்.

திரு. கோவை மகேசன்,
ஆசிரியர், சுதந்திரன்.

அன்புடையீர்,

வணக்கம், நலம்; 'சுதந்திரன்' (17-2-71) இதழ் இனிய பெரிய செய்தியைத் தாங்கி வந்து என்னை மகிழ்வில் ஆழ்த்தியது. ஈழத்தின் நான்கு தமிழ்க் கட்சினரும் 7-2-71 ஒன்று கூடினார்கள்—தமினத்தின் குறைந்தபட்சக் கோரிக்கைகள் பற்றி ஒன்றுபட்ட முடிவுக்கு வந்தார்கள் என்னும் உவகைத் தேனூறு என் இதயக் கழனியைப் பொங்கிப் பொலியச் செய்தது. 'வல்லை ஈட்டிய வரலாற்றுச் சாதனை'யைப் பற்றிய செய்திகளை ஒன்றுவிடாமல் படித்தேன்; எழுத்து எழுத்தாகப் படித்தேன்; இரண்டு முறை, மூன்று முறை படித்தேன். படிக்கப் படிக்க ஆனந்தத்தால் என் நெஞ்சு அடைத்தது; கண்



களிலே ஆனந்த மணி திரண்டது:

என் தமிழர்களின் ஒற்றுமையின்மை நினைந்து, நினைந்து, அழுது அழுது கன்றிச் சிவந்துபோன என்நெஞ்சுக்கு இதமான ஒற்றடமாகிய இச்செய்தியைத் தந்த வல்லைவத் தமிழர் மூவரை வாழ்த்துகிறேன், இந்தப் பெரும் திருப்பத்தை அருஞ் சாதனையாக்கிக் காணப்போகும் தமிழர் அனைவரையும் வாழ்த்துகிறேன்; ''என் இரத்தமும் சதையுமாகிய ஈழத்தமிழனே வெற்றி உனதே - தயங்காமல், தளராமல், ஒன்றுபட்டு மேற்செல்'' என்று கூவிக் கூவிக் களிக்கின்றேன்.

உண்மைதான்—

'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார், இங்குள்ள தமிழர்கள் ஒன்றுதல் கண்டே!'

அன்புடன்,
சாலை இளந்திரையன்.

## கே. பி. இரத்தினயக்காவிடம் உதவி கேட்டதமிழ் எம். பி. யார்?

### வட்டுக்கோட்டைத் தியாகராசாவின் மருமகன் வட்டார வித்தியாதிகாரியானது எப்படி?

விளையாட்டு மந்திரி திரு. கே. பி. இரத்தினயக்கா ஊர்காவற்றுறையில் தமிழரசுக் கட்சி எம். பி. ஒருவர் தனது மருமகனுக்கு வேலைகேட்டு வந்ததாக ஒரு செய்தியை வெளியிட்டிருந்தாரல்லவா?

இதுபற்றி ஊர்காவற்றுறை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. பி. இரத்தினம் அவர்கள் இதுபற்றிப் பாராளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட மந்திரியிடம் யார் அந்த எம். பி. எனக்கேட்டதும் அதற்கு மந்திரி தமிழ் எம். பி. ஒருவரென்றே கூறினேன் என்று பதிலளித்ததை வாசகர் அறிவர்.

இப்போது யார் அந்த தமிழ் எம். பி. என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெரிந்து விட்டது.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராசாதான் அந்த ஆசாமி என்பதைத் தமிழ் பேசும் மக்களால் இப்போது ஊகிக்கமுடிகிறது;

திரு. கு. இராசையா பி. எஸ். ஸி. (சென்னை) சுளிபுரம் விக்ரோறியா கல்லூரி ஆசிரியராய் இருந்தவர். இவர் வட்டுக்கோட்டை எம். பி. திரு. தியாகராசாவின் சொந்த மருமகன்: அத்துடன் அவர் திரு. தியாகராசாவின் மூத்த மகளின் கணவருமாவர். இவர் 1-2-71 தொடக்கம் உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரியாக நியமனம் பெற்றிருக்கிறார். இவரின் வேலைக்காகவே தமிழ் எம். பி. ஒருவர் உதவி கேட்டாரென்பது இப்போது தெரிகிறதல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் மக்களின் உரிமைக் குரல்

# எண்ணம்

## ஈழத் தமிழகமும் "கிழக்கு பாகிஸ்தான்" ஆகுமா?

கிழக்கு பாகிஸ்தானிய மக்கள் அவாமி லீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மானின் தலைமையிலே சமஷ்டி அடிப்படையில் கிழக்கு பாகிஸ்தானுக்கு மாகாண சுயாட்சி கோரி வீரப் போர் நடாத்தி வருகிறார்கள். இந்த விடுதலைக் கிளர்ச்சியை நசுக்கிவிட பாகிஸ்தான் ஜனாதிபதி யஹ்யாகான் இராணுவத்தை ஏவிவிட்டு, கொடுமை பல புரிந்தும், அவற்றையெல்லாம் சகித்துக் கொண்டு குன்றாத உணர்ச்சியுடனும், குலையாத மொழி உணர்வுடனும் கிழக்கு பாகிஸ்தானிய மக்கள் தியாக வேள்வியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஈழத்திலும் சமஷ்டி அரசமைப்பின்கீழ் ஈழத்தமிழினத்துக்குதன்னாட்சி உரிமை கோரிப் போராட்டம் நடத்தி வரும் நாம், ஈழத் தமிழ் பேசும் மக்களின் சார்பாக கிழக்கு பாகிஸ்தானிய மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எங்கள் தார்மீக ஆதரவைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்; கிழக்கு பாகிஸ்தானிய மக்களின் மாநில சுயாட்சிப்போர் வெற்றியடைய வேண்டுமென்று எமது நல்வாழ்த்துக்களையும் காணிக்கையாக்குகிறோம்.

ஒரு மொழி பேசும் மக்களின் தேசிய உணர்ச்சிகளை மதிக்க மறுத்து, அவர்களை நசுக்க நினைத்தால் அந்த மக்கள் தமது தேசிய நலன்களைப் பாதுகாத்துக்கொள்ள போராட்டத்திலிறங்குவதைத் தவிர வேறு மார்க்கமே யில்லை.

கிழக்கு பாகிஸ்தானிய மக்கள் மதத்தால் இஸ்லாமியர்களாக இருந்தாலும் மொழியால் வங்காளிகள்; வங்காள தேசிய உணர்ச்சி மிகுந்தவர்கள். இந்த மக்கள் தமது மொழியையும் தேசிய நலன்களையும் மரபையும் தனித்துவத்தையும் பாதுகாத்துக்கொள்ள சமஷ்டியரசியலமைப்புக்குட்பட்ட மாகாண சுயாட்சி தமது பிரதேசத்துக்கு வேண்டும் என்று குரல் கொடுத்து வருகிறார்கள்.

இந்தக் கோரிக்கையை முன்வைத்து இதற்காகப் போராடுவதற்கு தோன்றிய இயக்கமே ஷேக் முஜிபுர் ரஹ்மானின் தலைமையில்இயங்கும் 'அவாமி லீக்' ஆகும். ஆம், எப்படி இந்நாட்டில் தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனமாக இயங்கி சமஷ்டியரசியலமைப்புக்குட்பட்ட தன்னாட்சிக்காக போராடி வருகிறதோ—தமிழ் தேசிய உணர்ச்சியை பிரதிபலிக்கிறதோ—அதே போன்றதோர் இயக்கமே அவாமி லீக். கிழக்கு பாகிஸ்தானியர்களின் விடுதலை வேட்கையையும், வங்காள தேசிய உணர்ச்சியையும் பிரதிபலிக்கும் இயக்கம் இதுவாகும்.

அண்மையில் நடைபெற்ற பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் கிழக்கு பாகிஸ்தான் மக்கள் 'அவாமி லீக்' இயக்கத்தைச் சேர்ந்தவர்களைப் பெருவாரியாகத் தெரிவு செய்ததன் மூலம் தாங்கள் விடுதலைக் குரலை ஜனநாயக வழியில் தெரியப்படுத்தினர்;

கிழக்கு பாகிஸ்தான் மக்களின் தேசிய விடுதலை உணர்ச்சியை—வங்காள தேசிய உணர்ச்சியை — இராணுவத்தைக் கொண்டு அடக்கியொடுக்கிவிட திட்டமிட்டது யெஹியாகானின் இராணுவ அரசு; துப்பாக்கி முனையில் பாகிஸ்தானில் ஒருமைப்பாட்டைக் கொண்டுவர முனைந்தது. ஊரடங்குச் சட்டத்தை ஏவி விட்டது.

ஆனால் விடுதலை வெறியின் முன்னால் இராணுவமும் ஊரடங்குச் சட்டமும் எம்மாத்திரம்? ஊரடங்குச் சட்டத்தை மீறினார்கள் மக்கள். துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகப் பறந்தன—மார்பைத் திறந்து காட்டினர் மக்கள்! 300க்கும் மேற்பட்டோர் விடுதலைவேள்வித்தீயில் கிழக்கு பாகிஸ்தானில் இதுவரை பலியாகியிருப்பதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

கிழக்கு பாகிஸ்தானிய மக்கள் நிராயுதபாணிகளாக முழுக்கமுழுக்க அஹிம்சை வழியில் வெறிபிடித்த ஆதிக்கத்தை எதிர்த்து விடுதலைக்காக வீரப்போர் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆம், நமது தந்தை செல்வாவைப் போலவே அஹிம்சை வழியில், ஒத்துழையாமை, வரிகொடா இயக்கம், சட்ட மறுப்பு போன்ற அறப்போர் முறைகளைப் பயன்படுத்தியே விடுதலைப் போராட்டத்தை நடத்தி வருகிறார் அவாமி லீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான். அந்த வீரத்தலைவருக்கு நமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இங்கும் நமது சமஷ்டிக் கோரிக்கையை திரித்து எமக்கு பிரிவினைவாதிகள் என்று ஆட்சியாளர்கள்பட்டம் சூட்டி வருவது போலவே ஷேக் முஜிபுர் ரஹ்மானையும் பிரிவினைவாதி யென்று பாகிஸ்தான் அரசு குற்றம் சுமத்தியிருக்கிறது. இதை ரஹ்மான் மறுத்துள்ளதுடன் தாம் ஓர் சமஷ்டி வாதியே தவிர பிரிவினைவாதியல்லவென்பதை தெளிவாக்கியுள்ளார்;

ஒரு மொழி பேசும் மக்களின் தேசிய உணர்வுகளை அழித்தொழிப்பதன் மூலம் ஒருபோதும் தேசிய ஒருமைப்பாட்டினை உருவாக்கி விட முடியாது; அப்படி அழித்தொழிக்க முயன்றால் அம்மக்கள் அதை எதிர்த்து வச்சிர உள்ளத்துடன் போராடி தமது தனித்துவத்தை நிலை நாட்டியே தீருவர். இதற்காக எவ்வளவு தியாகங்களையும் செய்ய அவர்கள் தயங்க மாட்டார்கள்.

ஈழத்திலும் தமிழ் பேசும் மக்கள் தமிழரசுக் கட்சியின் தலைமையிலே சமஷ்டிக்குட்பட்ட தமிழரசு ஒன்று தங்கள் தாயகத்தில் ஏற்பட வேண்டும் என்று கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக போராடிவருகிறார்கள்.

புதிய அரசியலமைப்பில் இந்தக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள முன்வர வேண்டும்.

அப்படிச் செய்யத் தவறி—தமிழ் தேசிய உணர்வுகளை [illegible] இங்கும் ஒரு 'கிழக்கு [illegible] உறுதி பென்பதை மிக [illegible] இங்கு கூறிவைக்கிறோம்;

## கிளிநொச்சியில் நடைபெறும் தமிழரசுக்கட்சியின் 12-வது மாநில மாநாடு!

### வன்னியர் சிலையும் நிறுவ ஏற்பாடு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 12 வது மாநில மாநாடு எதிர்வரும் ஏப்ரல் 30, மே 1, 2 ஆகிய திகதிகளில் நடைபெற விருக்கிறது.

மாநில மாநாடு வெகு சிறப்பாக நடைபெறுவதற்கான ஒழுங்குகளை வரவேற்புக்குழுத் தலைவர் மு. ஆலாலசுந்தரம் அவர்கள் கவனித்து வருகிறார். கரைச்சி ஊர் மன்றத் தலைவர் கா. செல்லையா, பட்டினசபை கிளிநொச்சித் தலைவர் ச. சு. முருகேசு அவர்கள் வரவேற்புக் குழு செயலாளர் திரு. இ. நடராசா அவர்களும் மாநாட்டு ஒழுங்குகளையும் அமைப்பு முறைகளையும் கவனிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

மாநாட்டில் — தமிழரசுக் கட்சியின் உரிமைப்போராட்டப் புகைப்படக் கண் காட்சிகள், தமிழ் புறக்கணிப்புக் காட்சி, தமிழ் நூற் கண்காட்சி, தமிழ் கலை கலாசார, ஓவிய சிற்பக் கண் காட்சிகள் ஈழப் பொருளாதாரக் கண் காட்சிகள் இடம் பெறவிருக்கின்றன.

கவியரங்கிலும் இலக்கிய அரங்கிலும் ஈழத்தின் தலை சிறந்த கவிஞர்களும் பேராசிரியர்களும் பங்கு கொள்வர்; தமிழகத்திலிருந்தும் இலக்கிய நிகழ்ச்சிகளிற் கலந்து கொள்ள பெரியோர் அழைக்கப்படுவர்:

மட்டக்களப்பு மாவட்டம் மலைநாடு, திருமலை, மாவட்டம், மன்னார், வவுனியா தொகுதிகளிலிருந்து பெருந்திரளான தொண்டர்கள் கலந்துகொள்ள விருக்கின்றனர்.

சித்திரை 23-24-25-26-27-28-ந் திகதிகளில் அமரர் வன்னியசிங்கம் அவர்களின் சிலை உடுப்பிட்டி தொகுதியிலிருந்து ஆரம்பித்து ஊர்வலம் பருத்தித்துறை வீதி காங்கேசன்துறை — யாழ்ப்பாணம் வீதி' கீரிமலை—கொல்லங்கலட்டி தெல்லிப்பளை மல்லாகம் சுன்னாகம் உடுவில் மானிப்பாய், சங்கானை சித்தங்கேணி காரைநகர் ஊர்காவற்றுறை, வேலணை, யாழ்ப்பாணம், கொக்குவில், கோண்டாவில், கோப்பாய், ஆவரங்கால், மட்டுவில், சாவகச்சேரி, கொடிகாமம், பளை, ஊடாக கிளிநொச்சியை வந்தடையும். 30ந் திகதி காலை அமரர் சிலையை தமிழரசுத் தந்தை திரைநீக்கஞ்செய்து நிறுவி வைப்பார்.

இதற்கான ஒழுங்குகளை மு. ஆலாலசுந்தரம், சோ; சேனாதிராசா ஆகியோர் கவனித்துவருகின்றனர். ஊர்வலம் செல்லும் வழிகளில் வரவேற்புகளும் தொகுதிகளில் ஒவ்வொரு இரவிலும் பொதுக்கூட்டங்களும் நடைபெறும்.

இதற்காக தொகுதிகளிலுள்ள ஊராட்சிமன்றங்கள், கி. மு; சங்கங்கள், நூல் நிலையங்கள், கட்சித் தொண்டர்கள் கிளைகளுடன் தொடர்புகொண்டுள்ளோம் ஊர்வல ஒழுங்குகளைப் பற்றிய தொடர்புகளைத் தொண்டர்களிடமிருந்து வரவேற்கிறோம். ஒத்துழைப்பும், உதவியும் தருமாறு அழைப்பு விடுக்கின்றோம்,"

—இவ்வாறு அமைப்புச் செயலாளர் சோ; சேனாதிராசா விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

## தமிழ்மொழி உரிமைகள் குறித்து பிரதமர்—தமிழரசார் பேச்சு!

புதிய அரசியல் திட்டத்தில் தமிழின் அந்தஸ்து குறித்து திட்டவட்டமான தெளிவான விதிகள் இடம் பெறவேண்டுமென பிரதமரிடம் தமிழரசுக் கட்சியினர் வற்புறுத்தியுள்ளனர்: இம் மாதம் 6ம் திகதி பிரதமருடன் தமிழரசுக்கட்சித்தூதுக் குழு நடத்திய பேச்சுவார்த்தையின் போது இவ்வாறு தமிழரசுத் தலைவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

இப்பேச்சு வார்த்தையில் தமிழரசுக் கட்சியின் சார்பில் திருவாளர்கள் சா. ஜே. வே. செல்வநாயகம், அ; அமிர்தலிங்கம், கா. பொ; இரத்தினம், சி. எக்ஸ். மாட்டின், எக்ஸ். எம். செல்லத்தம்பு, மு. திருச்செல்வம், எஸ். எம்; இராசமாணிக்கம் ஆகியோரும் அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் சிறிமா, அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி; சில்வா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தமிழ்மொழி உரிமைகள் வரையறை செய்யப்பட்டு அவை அரசியல் திட்டத்தில் இடம்பெற வேண்டுமென்று தமிழரசுக்கட்சியினர் இப் பேச்சுவார்த்தையின் போது வலியுறுத்தினர்: தமிழரசுக் கட்சியினர் வலியுறுத்திய முக்கிய கோரிக்கைகள் வருமாறு:—

1 வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழே உத்தியோக மொழியென்பது தெளிவாக்கப்பட வேண்டும்.

2 இவ் விருமாகாணங்களிலும் நீதிமன்ற மொழி தமிழாக இருக்க வேண்டும். பதிவேடுகள் யாவும் தமிழிலேயே இருக்கவேண்டும்.

3 தாய்மொழியேபோதனா மொழியென்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

4 இலங்கையின் எப்பாகத்திலிருந்தாலும், ஒரு தமிழ்க் குடி மகன் அரசாங்கத்துடன் தமிழில் தொடர்பு கொண்டு தமிழில் கருமமாற்றும் உரிமை இருக்க வேண்டும்.

5. ஒரு தமிழ்க் குடி மகன் தமிழிலேயே உயர் கல்வி கற்கவும், அரசாங்க சேவைப் பரீட்சைகளுக்கு தமிழிலேயே எழுதி தமிழ் மூலம் அர

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுச்சிபெற்ற தமிழகத்தில் ஈராறு நாட்கள்!

அன்பு நண்பா,

எழுச்சியுற்ற தமிழகத்தில் ஈராறு நாட்கள் சுற்றுப் பயணம் செய்து விட்டு புதிய தெம்புடனும், புதிய உற்சாகத்துடனும் திரும்பியிருக்கிறேன். திடீரென தமிழகம் சென்று வரமுடிவு செய்ததால், என் தமிழகப் பயணம் பற்றி உனக்கு முன் கூட்டியே தெரிவித்திட வாய்ப்பு ஏற்படவில்லை! இரு கிழமைகளாக உனக்கு மடல் தீட்டிடவும் முடியாமல் போய்விட்டது! மடல் காணுமல் மனம் குன்றிப் போயிருந்த உனக்கு இனி மகிழ்ச்சிதானே!

நண்பா, நானும், தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் அண்ணன் அமிர்தலிங்கமும், எனது இனிய நண்பர் இராசரத்தினமும் தமிழ்நாடு சென்றதைப் பற்றி இங்குள்ள ஏடுகள், மனம் போன போக்கில் செய்திவெளியிட்டு 'மகிழ்ந்திருந்தை' நாடு திரும்பியபின் என்னல் அவதானித்திடமுடிந்தது.

'தி.மு.கழகத்துக்காக தேர்தல் பிரசாரம் செய்வதற்காக தமிழரசுக்கட்சியினர் தமிழ் நாடு சென்றிருக்கிருர்கள்'

என்று பரபரப்பாக செய்தி வெளியிட்டிருந்தன இந்நாட்டு ஏடுகள். இச் செய்தியை இன்னும் கூட்டிக் கழித்து பெருக்கிப் பிரித்து தமிழரசுக்கட்சிக்கும் இந்திய திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் 'இரகசிய' உறவு இருப்பது போல 'தினபதியாரின்' சகோதர ஏடுகளான 'சன்' ஆங்கில ஏடும், 'தவச' எனும் சிங்கள ஏடும் செய்தி வெளியிட்டிருந்ததை கவனித்திருப்பாய். இது இந்நாட்டுப் பத்திரிகைகளின் வழக்கமான 'புலம்பல்' என்பது நீ அறியாததா என்ன?

திராவிட முன்னேற்றக்கழகத்துக்கு தேர்தல் பிரசாரம் செய்வதற்காக நாம் தமிழ் நாடு சென்றிடவில்லை. நாம் போய்ப் பிரசாரம் செய்தால் தான் திராவிட முன்னேற்றக்கழகம் தமிழகத்தில் வெற்றி பெற்றிடும் என்ற நிலையில் கழகமும் இல்லை. தனி எல்லைக் கோட்டுடன் இருக்கும் மற்ருேர் நாட்டின் உள்ளூர் அரசியலில் ஈடுபடுவது அறநெறியல்ல என்பதை உணராதவர்களுமல்ல நாம்! எனவே நாம் தமிழகம் சென்றது திராவிட முன்னேற்றக்கழகத்துக்கு தேர்தல் பிரசாரம் செய்வதற்காக என்ற கருத்தினை முற்ருக மறுத்திட வேண்டியது எனது கடமை!

நண்பா, அப்படியானல் திராவிட முன்னேற்றக் கழகத்தினை ஆதரித்து நீங்கள் கருத்துத் தெரிவிக்கவில்லையா? கலைஞர் கருணநிதியே தமிழகத்தின் முதல்வராக மீண்டும் வரவேண்டும் என்று கூறவில்லையா என்று மாற்ருர் கேட்டிடலாம்.

நிச்சயமாக கூறினேம். திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியிலேதான் தமிழ் ஏற்றம் பெற்றது; தமிழ்நாடு தலை தூக்கியது; தமிழினம் எழுச்சி பெற்றது; ஆகவே திராவிட முன்னேற்றக் கழகமே மீண்டும் தமிழக ஆட்சியை கைப்பற்ற வேண்டும்; இதுவே எமது ஆசை; ஈழத்தமிழ் மக்களின் பேராசையும் இதுவே: என்று தமிழ் நாட்டுத் தேர்தல் பற்றி தமிழகப் பத்திரிகை நிருபர்கள் நம்மிடம் கருத்துக் கேட்டபோது எடுத்துக் கூறினேம்.

நண்பா, உண்மையிலேயே 17-2-71 சுதந்திரன் 'எண்ணம்' பகுதியிலேயே திராவிட முன்னேற்றக் கழகம்தான் தமிழகத்தை தொடர்ந்து ஆள வேண்டும் என்பதே ஈழத்தமிழர்களின் பெருவிருப்பம் என்பதை எந்தவித ஐயத்துக்குமிடமின்றி மிகவும் தெளிவாக தெரிவித்திருந்ததை படித்திருப்பாய்—இதைவிட தி. மு. கழகத்துக்கு நாம் செய்யக் கூடிய பிரசாரம் வேறு என்ன இருந்திட முடியும்?

இதை ஏன் இங்கு கூறுகிறேனென்ருல் நாம் தமிழகம் சென்றதன் நோக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு தேர்தல் பிரசாரம் செய்வது அல்ல; சென்ற இடத்தில் தமிழ் நாட்டுத் தேர்தல் முடிவு எப்படி இருக்க வேண்டும் என்று ஈழத் தமிழர்கள் கருதுகிருர்கள் என்பதை எடுத்துக் கூறினேம்; என்பதை ஐயந்திரிபற விளக்குதற்குத்தான்!

நண்பா, தமிழகமெங்கும் அண்ணு ஏற்படுத்தி விட்டுள்ள தமிழ் தேசிய விடுதலை உணர்வு பொங்கி வழிந்திடக்கண்டேன்; எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்; எல்லாம் தமிழ் என்ற நிலையை தமிழ் நாடு முழுவதும் கண்டு கண்டு பேரானந்தமடைந்தேன்.

தமிழ் நாட்டில் பேரறிஞர் அண்ணுவும், பெரியாரும் பாரதியும் பாரதிதாசனும் வளர்த்து விட்ட தன்மான தமிழ் இயக்கத்தை—தமிழர் விடுதலை உணர்ச்சியை—மழுங்கடித்திடச் செய்ய திட்டமிட்டு ஒரு கும்பல் சதி வேலைகளில் ஈடுபட்டிருக்கிறது. முதலாளித்துவ பத்திரிகைகள் இதற்கு தூபம் போட்டு வருவதையும் கண்டேன்.

தமிழுக்கும் தமிழர்க்கும் எதிராக செயல்படும் இச்சதிகார கும்பலின் சூழ்ச்சிகளையெல்லாம் உடனுக்குடன் தகர்த்தெறிந்து தமிழக மக்களுக்கு தெளிவான அரசியற் பாதையை தமிழக முதல்வர் கலைஞர் கருணநிதி காட்டி வருகிருர்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், கழகத் தலைவர்களுக்கும் எதிராக அன்ருடம் மாற்ருர்கள் ஆயிரக்கணக்கான பொய்களை அடுக்கினலும், மக்களிடையே அவை எடுபடுவதாக இல்லை. மக்களிடையே, மக்களோடு மக்களாக—மக்கள் இயக்கமாக விளங்கும் தி. மு. கழகம் பற்றி மக்கள் தெளிவாக புரிந்துவைத்திருப்பதைக் கண்டேன். தி. மு. கழக ஆதரவாளரான சாதாரண டாக்சி டிரைவர் கூட தெளிவான அரசியல் விளக்கங்கள் கூறுவதைக்கேட்டு மெய் சிலிர்த்தேன்.

## அரசியல் மடல்

ஆம், நண்பா, அறிஞர் அண்ணு வளர்த்துவிட்ட தி. மு. க. இயக்கம் தமிழ் நாட்டு மண்ணில் நன்ருக வேரோடி மக்கள் இதயங்களிலெல்லாம் ஆழமாகப் பதிந்துவிட்டது. அதை அறுத்தெறிய நினைப்பவர்கள் அழிந்துபோவார்கள். இதை தேர்தல் முடிவுகள் நிச்சயம் எடுத்துக்காட்டத்தான் போகின்றன.

தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி சாதாரண மக்கள்கூட ஈழத்துத் தமிழர்களின் பிரச்சினை பற்றி அறிந்துகொள்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகிருர்கள். ஈழத்தில் என்ன நடக்கிறது—தமிழர்களின் நிலையென்ன—தந்தை செல்வா நலமாக இருக்கிருரா என்பன போன்ற கேள்விகளையெல்லாம் மெத்த ஆர்வத்தோடும், அபிமானத்தோடும் நம்மிடம் கேட்டிடக் கண்டேன்! இதயம் பூரித்தேன்:

அதுமட்டுமல்ல நண்பா, தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி தமிழ்நாட்டிலுள்ள சாதாரண மக்களும் சுதந்திரன்மீது பற்றும் பாசமும் சுதந்திரன் படிப்பதில் அதிக ஆர்வமும் காட்டி வருவதைக் கண்டபோது உற்சாகத்தால் உளம் மகிழ்ந்தேன்.

ஆம், நண்பா, கலைஞர் கருணநிதியின் மருமகனும் தென் சென்னை எம். பி. யுமான முரசொலி மாறன் எம். ஏ அவர்கள்கூட 'அரசியல் மடலை' சுதந்திரனில் மெத்த ஆர்வத்தோடு படித்துவருவதாக என்னிடம் உளம் திறந்து கூறினர்.

1967ம் ஆண்டு முதல் புதிய பாதையில் — அண்ணு பாதையில் செல்லத் தொடங்கிய தமிழ்நாடு இனி வேறு பாதைகளுக்கு மாருது; தமிழ் மக்களுக்கு தனி வாழ்வு—தமிழ் நாட்டுக்கு தனிவாழ்வு காணுமட்டும் கலைஞர் கருணநிதியின் சீரிய தலைமையிலே அணிவகுத்துச் செல்லும் என்ற உறுதி தமிழகச் சுற்றுப்பயணத்தின் பின் எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

வங்கக் கடற்கரையில் துயிலும் பேரறிஞர் அண்ணு அவர்களின் சமாதிக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திட நாம் சென்ற போது, அண்ணுவின் சமாதியை சுற்றி கண்ணீர் மல்க தாய்மார்கள் 'அடியழித்து' வணங்குவது கண்டு உளம் [illegible]தோம்:

அந்த அளவுக்கு அண்ணு அவர்கள் தமிழ் மக்களின் இதயங்களிலே தெய்வமாகிவிட்டார். அந்த தெய்வம் அங்கு கொலுவிருந்திடும் போது—தமிழ் பகைவர்கள் தமிழ்நாட்டைக் கைப்பற்றுவது முடிகிற காரியமா என்ன?

1967ம் ஆண்டு 'தமிழாய்ந்த தமிழ்ப் புலவன் தமிழ்நாட்டின் முதலமைச்சாய்' வர வேண்டும் என்ற புரட்சிக் கவிஞர் கனவை நனவாக்கிவைத்த தமிழ்நாட்டு மக்கள் இந்தத் தேர்தலில், ''தமிழ் பகைவன் தமிழ் நாட்டின் முதலமைச்சாய் வாராது தடுப்பதில'' மிகுந்த உறுதியோடும் வைராக்கியத்தோடும் இருந்திடக் கண்டோம்!

அண்ணன் அமிர்தலிங்கம் அவர்கள் சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் நடைபெற்ற கலைஞர் கருணநிதி அவர்கள் எழுதிய 'நானே அறிவாளி' எனும் நாடகத்துக்கு தலைமை தாங்கி சுமார் 1 இலட்சம் மக்கள் முன் அரை மணி நேரம் அற்புதமான உரையாற்றினர். அண்ணன் அமிர்தலிங்கத்தை 'நாவலர் நாவலர்' என்று நா இனிக்க அழைத்து கௌரவித்தனர் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்!

நாடகம் முடிந்தவுடன் கலையத் தொடங்கிய மக்கள் திரள் அமிர்தலிங்கத்தின் வீர ஒலி கேட்டு மெய்மறந்து அப்படியே நின்றது: அமிர்தலிங்கத்தின் கருத்துக்களை கையொலியெழுப்பி வரவேற்றது தமிழர் கூட்டம்!

இதேபோன்று கோடம்பாக்கத்தில் கலைஞர் கருணநிதி தலைமையில் நடைபெற்ற சீர்திருத்த திருமண விழாவொன்றில் நானும் கலந்துகொண்டு ஈழத்தமிழர்களின் இதய ஒலியை எதிரொலித்தேன். இவ்விழாவில் மற்ருேர் 'இலங்கையரும்' கலந்துகொண்டார்—அவர்தான் கண்டியில் பிறந்த நமது மக்கள் திலகம் எம். ஜி ஆர். அவர்கள்!

முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்,
சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம்,
கலைஞர் மு. கருணநிதி
மக்கள் திலகம் எம். ஜி. ஆர்,
ராஜாஜி
முரசொலி மாறன்,
என். வி. நடராசன்,
காஞ்சி மணிமொழியார்,
முரசொலி அடியார்,
ஒப்பனைக் கலைஞர் சிவராமன்,

போன்ற பலரைச் சந்தித்தோம்—உரையாடினேம். ஈழத் தமிழர்களின் நிலையினையும் நெருக்கடிகளையும் எடுத்துரைத்தோம். தமிழக—ஈழ உறவுகளை துண்டித்திட இங்கு நடக்கும் சதிகளையும் சுட்டிக்காட்டினேம். மொத்தத்தில் நமது தமிழக சுற்றுலா சுவைவும் பயனும் உள்ளதாக அமைந்தது என்று கூறுவேன்.

திருச்சி, ஸ்ரீரங்கம், திருவானைக்கா, சமயபுரம், மதுரை திருப்பரங்குன்றம், சென்னை, திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் சிதம்பரம், தஞ்சை, வயலூர், சுவாமிமலை, கும்பகோணம், திருவிடை மருதூர், புள்ளிருக்கும் வேளூர், திருவையாறு, இராமேஸ்வரம் ஆகிய இடங்களையெல்லாம் கண்டுகளித்தோம்; புத்துணர்ச்சிபெற்ருேம்; ஆண்டதமிழினம் மீண்டுமொருமுறை ஆளும் காலம் நெருங்கிவந்து கொண்டிருப்பதை எண்ணி பூரித்தோம். வைகையும் வற்ருக் காவிரியும் கொள்ளிடமும் கண்டுவந்தோம்.

நண்பா, தமிழ் நாட்டில் நான் உலாவிய போது—தமிழக மண்ணில் என் கால்கள் பட்ட போது—தமிழகத்தின் காற்று என்மீது தொட்ட போது— ஏதேதோ எண்ணங்கள், ஏதேதோ சிந்தனைகள்— எல்லாம் எனக்கு ஏற்பட்டன.

சேரனும், சோழனும் பாண்டியனும் ''ஒரு மொழி வைத்து உலகாண்ட'' பசுமையான காட்சி தெரிந்தது. ஈழத்தையும், தமிழகத்தையும் கடல் பிரிக்கு முன்னர் தமிழ் நாடும் ஈழமும் ஒன்ருக—ஒரே பிணைப்பாக இருந்த காட்சி நினைவில்வந்தது. தமிழைப் பழித்தவடநாட்டவர்கள் மீது படையெடுத்துச்சென்று அவர்களை அடிமைகொண்டு, அவர்களது தலையிலே கற்பின் செல்வி கண்ணகி ஆத்தாளுக்கு சிலையெடுக்க கல்லேற்றிவந்த சேரன் செங்குட்டுவனதுவீரம் தெரிந்தது. கங்கைக்கரைமீதுபடையெடுத்து கங்கைக்கரையை வெற்றி கொண்டு கங்கை கொண்ட சோழபுரம் அமைத்த காட்சி தெரிந்தது. இமயத்தை வரம்பாகக் கொண்டு ஆட்சிபுரிந்து இன்பத்தமிழ் வளர்த்த ''இமயவரம்பன்'' நெடுஞ்சேரலாதன் இதயக்காட்சியிலே தென்பட்டான். ஈழத்தின் மீது படையெடுத்து வந்து பத்தாயிரம் சிங்களவரை கைதிகளாக்கி தமிழகம் கொண்டு சென்று காவிரிக்கு கல்லணை கட்டிய கரிகாற் பெருவளத்தானின் வீரம் தெரிந்தது.

வள்ளுவர் இருந்து குறள் எழுதிய காட்சியும் மதுரையில் கண்ணகி வழக்குரைத்த மாட்சியும், சங்கத்தில் புலவர்கள் தமிழாய்ந்த

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீலம் செய்யும் ஜாலம்

'மாலவன் நீலமாகத் தோன்றுவதற்கு என்ன காரணம்?' என்று ராஜாஜியைப் பார்த்துக் கேட்டார் விவேகானந்தர்.

ராஜாஜி மாணவராக இருந்தகாலம்அது. அவர்பயின்ற சட்டக் கல்லூரிக்கு வருகை தந்த சுவாமி இப்படியொரு கேள்வியைக் கேட்டுவைத்தார். அர்த்தம் பொதிந்த இந்தக் கேள்விக்கு மிகப் பொருத்தமாக விடைதந்து அந்த வீரிய விவேகியையே வியப்பில் ஆழ்த்திவிட்டார், கூரிய மதிகொண்ட சீரிய மாணவர், ராஜாஜி.

சிந்தனைக்குரிய கேள்வி. உலகம்போற்றும் மகானொருவர் கேட்டது என்பதாலல்ல உயர்ந்து வரும் மாணவரிடம் கேட்கப்பட்டது என்பதாலுமல்ல; மனிதன் ஒவ்வொருவனுமே அவசியம் தெரிந்து-புரிந்து வைத்துக் கொண்டிருக்க வேண்டிய விடையைத் தரும் கேள்வி என்பதால் அதற்கு தனியான முக்கியத்துவம் உண்டு. ஆகவே, இறிது கவனிப்போம்:

பரந்த கடல் நீலமாகத் தோன்றுகிறது. விரிந்த வானும் நீலமே. திருமால் நீலவண்ணன். சிவனார் நீலகண்டன், சக்தியின் வண்ணமும் நீலமே அவளுக்கு நீலி என்ற பெயர் இதனால்தான் ஏற்பட்டது.

இவர்கள் ஏன் இப்படி நீலமே தம் கோலமாய் கொண்டுவிட்டார்கள்? பார்ப்போம்:

அழுக்கு:

பல நாள் உடுத்த வெளுப்பான ஆடையும் அழுக்காகி பளுப்பாகிவிடுகிறது. அப்போது நாம் அதைத் துவைக்கிறோம். அழுக்கு அகல்கிறது வெளுப்பு (பிரகாசம்) அமைகிறது. இந்த வெளுப்பு ஆடையின் உண்மைத் தன்மை—அது அழுக்கால் மறைந்திருந்தது. அதனால் ஆடை பழுப்பாக இருந்தது. துவைத்து நாள் அழுக்கை அகற்றினோம். மீண்டும் வெளுப்பு அமைகிறது.

இவ்வாறே மனிதன் அறிவு வடிவானவன். அவ்வறிவுத் திறன் அறியாமையால் (அழுக்கு) மறைக்கப்பட்டுள்ளது. அறியாமையை அகற்றிவிட்டால், அறிவு மிளிர்கிறது. அவன் பிரகாசிக்கின்றான்.

அறியாமையை அகற்றுவதே கல்வி எனப்படுவது. அதாவது, கல்வி என்பது அறியாமை அகற்றப்படுவது என்று பொருளாகிறது.

இதற்கு — அறியாமையை அகற்றுதற்கு:

மனிதன் முதலில் 'தன்னிடம் அறியாமை உளது' என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே தான், அன்று ராஜாஜியிடம் விவேகானந்தர் அப்படி ஒரு கேள்வியை கேட்டுவைத்தார்.

அந்தக் கேள்வி: மாலவன் நீலமாகத் தோன்றுவதற்கு என்ன காரணம்? என்பது. இதற்கான சுருக்கமான விடை: 'அவன் மாயன்' என்கிறகாரணமே.

'மாயை' என்கிற குணத்தைக் கொண்டிருப்பதால் அவன் 'மாயன்' என அழைக்கப்படுகிறான்.

இப்படி,

மாயையை இங்கு இருள் என்று குறிப்பிடுவதற்கு அதன் 'மறைக்கும்' தன்மை காரணமாகிறது.

இருள் கடுமையானது. எந்தப் பொருளையும் மறைத்து தன் சொந்த நிறமாய கருமையைக் காட்டும் தன்மை இருளுக்கு உண்டு—இருளுக்கே உண்டு.

'ஒரு பொருளும் காட்டாது இருள்' என்று திருவருட்பயனில் வருகிறது.

மறைக்கும் தன்மையில் இருளை ஒத்திருப்பதால், மாயை 'இருள்' அல்லது 'இருள் மலம்' எனப் பேதப்படுகிறது.

இந்த அடிப்படையிலேயே திருமால் 'கருமைவண்ணன்' 'முகில் வண்ணன்,' 'கார் வண்ணன்' என்றெல்லாம் சூட்டப் பெறுகிறான்.

ஆனால், இந்த உவமானம் மாயையை முற்றும் விளக்கும்படியாக இல்லை ஏனெனில் மாயை தன் வலிமையில் இருளையும் மிஞ்சிவிடுகிறது.

அதாவது இருளிடம் இல்லாத குணம் ஒன்று மாயையிடம் அமைவாகியுள்ளது. இதனை, உமாபதி சிவாச்சாரியார் கூறுகிறார்:

'இரு பொருளும் காட்டாது இது.'

இருளானது எல்லா பொருளையும் மறைத்தாலும் தன்னையும் மறைத்துக் கொள்வதில்லை. இருளினை இதுதான் இருள் என்று நாம் காணும்படியாக தன்னைக் காட்டி நிற்பது அது.

ஆனால், மாயை பிற பொருள்களையும் காட்டாது மறைப்பதோடு தன்னையும் காட்டாது மறைத்துக் கொள்ளுகிறது. மிகவும் விசித்திரமான விதத்தில்.

மூடும் பொருள், மூடப்படும் பொருளான இரு பொருளையும், மாயையின் ஆட்சி காட்டாது மறைக்கிறது.

இப்போது ஆசாரியரது பாட்டைப் பாருங்கள்

'ஒரு பொருளும் காட்டாது இருளுருவம் காட்டும் இரு பொருளும் காட்டாது இது.'

இப்படி, தானும் மறைந்து உண்மையையும் மறைக்கும் மாயை இருளிலும் கொடியதாய் கொள்ளப்பட்டு நீல நிறத்தால் குறிக்கப் பெறுகிறது.

இந்த நீல வண்ணம் இருக்கிறதே, இது ஆளை மயக்கும் ஜால வண்ணம். (கண்ணனை ஜால மன்னன் என்று கூறுவது நினைவிற்கு வருகிறதல்லவா?)

மேலே விரிந்த வானைப் பார்த்தால், அது நீலமாய்த் தெரிகிறது.

கீழே, பரந்த கடலைப் பார்த்தால், அதுவும் நீலமாகத்தான் இருக்கிறது.

இந்தக் கடலும், அந்த வானமும் உண்மையில் நீலமானதா? இல்லை. அப்படித் தோன்றுகிறதே தவிர உண்மையில் அப்படி இல்லை.

நீலம், பொய்யிலும் பொய்யான போலித் தோற்றம். மயக்கும் மாயம் அது. மெய்யை பொய்யாக்கி (மூடி) பொய்யை மெய் போலக் காட்டுவது மாயை. "எதை நாம் பார்க்கவில்லையோ— எதைஎவரும் பார்க்க முடியாதோ— அது மாயை" என்பது மாயைக்குத் தரப்படும் விளக்கம்.

கொடு நஞ்சிலும் கொடுமையானது மாயை. அதன் பிடிக்கு யாரும் தப்பிவிட முடியாது.

நீல வானத்திற்கு எப்படி எல்லை கிடையாதோ அப்படி இந்த மாயையின் தொல்லைக்கும் எல்லை இல்லை.

இதுபோல, இன்று ஈழத்திலும் நீலம்தான் தன் கைவரிசையை காட்டிவருகிறது. அது ஆட்சி என்ற பெயரில், தமிழ் இனத்தையே கவ்வ எத்தனித்துக் கொண்டிருக்கிறது. அதன் சாதனை தமிழுக்கு—தமிழினத்திற்கு சோதனை! முடிவு வேதனையாகி விடும்.

இந்த நீலக் கட்சி (சிங்களக் கூட்டணி என்கிற பிணி) கடலைப் போன்றது—

கடல் தூரத்திற்கு அழகாக, நீலமாய் — நீளமாய் காட்சி அளிக்கும் நல்ல வாடைக் காற்று இதமாக மிதந்துவரும்.

ஆனால் அது, கொந்தளிப்பின் பிறப்பிடம். கொடிய, கொடூர பிராணிகளின் இருப்பிடம். பயங்கரத்தின் சிறப்பிடமே அதுதான்.

இப்படியான கொடிய கடலாக இன்றைய சிங்கள அரசாங்கம் இருக்கிறது, தமிழர் அறிவுக்குப் பேர் போனவர்கள். அவர்கள் புத்திசாலித்தனமாக இக்கட்டான இக்கட்டத்தில் செயற்பட வேண்டும். மண் குதிரைகளை நம்பி (குமாரசூரியர் வி. பொன்னம்பலம், சுப்பிரமணியம் போன்றோர்) கொடுங் கடலுக்குப் பலியாகி விடக்கூடாது. மாயனுக்கு நெஞ்சில் சிவப்பு வண்ணம் உண்டு—அது அன்பு, அழகு, செல்வம் இவற்றைக் காட்டுவது.

மாயஞ் செய்யும் இந்த நீலக்கட்சி நெஞ்சில் ஆபத்துக்கு அறிகுறியான சிவப்பு வண்ணத்தைக் கொண்டுள்ளது. மறைவழி ஒழுகும் தமிழ் பண்பாட்டிற்கு முற்றிலும் எதிர்மாறான கம்யூனிசத்தை அது நெஞ்சாக—நஞ்சாகக் கொண்டுள்ளது.

கம்யூனிசம் போன்ற கொள்கைகள், மேற்கத்திய நாடுகளுக்கு ஒருகால் ஒத்துப்போகலாம். நன்மையாகவும் அமையலாம்.

ஆனல், ஆன்மீகத்தின் அடிப்படையில், உண்மை —அன்பு — சத்தியம் என்கிற கருவிகொண்டு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்கிற நெறி நின்று எது செய்தாலும் அது "அவனுக்கு" நாம் செய்யும் நற்பணி என்கிற பாங்கில் செயலியற்றும் தன்னிகரற்ற தனிக்குடி—தமிழ்க் குடிக்கு இந்த கம்யூனிசமும் அது போன்ற பிற நாட்டுகித்தாந்தங்களும் ஒரு போதும் ஒவ்வாது.

தப்பித் தவறி தமிழினம் அதை ஏற்க நேர்ந்தால் அது நாட்டையும், மக்களையும் அந்நியர் ஆதிக்கத்துக்கு அடிமை செய்வதாகவே முடியும்.

ஆகவே, இந்த நீலத்தின் ஜாலத்திற்கு தமிழும், ஈழத் தமிழினமும் பலியாகிவிடக் கூடாது.

மாறாக, அவற்றையும் அவைபோன்ற அழிவுச் சக்திகளையும், ஆக்கிரமிப்புச் சக்திகளையும் முற்றாக ஒழித்துக் கட்ட ஒற்றுமையுடன் முன்வரல் வேண்டும்.

அது ஆக்கப்போர் அக்கப் போரல்ல! அறப்போர் அழிவுப் போரல்ல!! தாமதம் வேண்டாம். வெள்ளம் வரும் நாள் தூரத்தில் இல்லை. அதற்கு முன் நாம் அணையை கட்டிவிட வேண்டும்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

**தமிழ் வேந்தன்**

---

# ஈழவேந்தன் சிவத்தம்பி மோதல்

## தமிழர் அடிமைப்புத்திக்குச் சாட்டை!

அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிமன்றத்தின் இலங்கைக்கிளை அண்மையில் நடத்திய நூற்காட்சியை ஒட்டி ஒரு கருத்தரங்கு பம்பலப்பிட்டியில் சென்ற 21-2-71ல் மாலை 6, மணிவரையில் புவியியல் பேராசிரியர் திரு. குலரத்தினம் அவர்கள் தலைமையில் பல தமிழ் அறிஞர் முன்னிலையில் நடைபெற்றது. 1947—1970 வரை ஈழத் தமிழ் இலக்கியத்தில் ஏற்பட்ட வளர்ச்சி பற்றி வித்தியோதய பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. கா. சிவத்தம்பி அவர்கள் ஓர் உரை நிகழ்த்தினார்கள். இவ்வுரையை அடுத்து கலந்துரையாடல் நடைபெற்றது. திரு. சிவத்தம்பி அவர்கள் தன் பேச்சின் ஊடே ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றி பல சிக்கல்களைக் கிளப்பியதால் வெறும் கலந்துரையாடல் என்று தொடங்கிய கருத்தரங்கம் கேள்விக் கணைகளின் களமாகக் காட்சி அளித்தது.

பேச்சாளரை நோக்கி திரு. சோ. நடராசா, திரு. எப். எஸ். சி. நடராசா, திரு. கி. இலட்சுமணஐயர் மற்றும் பலர் பல கோணங்களில் இருந்து விடுத்த வினக்கள் சுவையுடையதாகவும் சூடு பிறப்பிக்கத் தக்கனவாயும் அமைந்து விளங்கின. இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போல் திரு. சிவத்தம்பியை நோக்கி திரு. ஈழவேந்தன் எழுப்பிய கேள்விகளும் அளிக்கப்பட்ட விடைகளும் அமைந்திருந்தன.

சிங்கள இலக்கியம் ஈழத்தில் வளர்ந்த வேகத்திற்கு இணங்க ஈழத்தில் தமிழ் இலக்கியம் ஒரு கட்டத்தில் வளரவில்லை என்பது திரு. சிவத்தம்பியின் பேச்சில் காணப்பட்ட ஒரு முக்கிய குறிப்பு இதற்கு விடையாக திரு. ஈழவேந்தன் கூறிய கருத்து[illegible] ஈழத்தில் சிங்கள இனமும் அரசும் இல்லை என்ற நிலையில் இருக்கிறது. சிங்கள எழுத்தாளர்களின் ஆக்க இலக்கிய படைப்பிற்கு சிங்கள அரசாங்கத்தின் ஆதரவு அளவு கடந்த நிலையில் உள்ளது. ஆனல் ஈழம் வாழ் தமிழர்கள் அடக்கி ஒடுக்கப்படும் அடிமை நிலையில் விடுதலை இலக்கியத்தில் ஏதும் புதிதாக படைக்கவேண்டும் என்ற எண்ணம் அற்று உற்சாகமும் உணர்ச்சியும் இழந்து எதிலும் ஒரு வெறுப்பும் சோர்வு மனப்பான்மையுமே அவர்களிடம் தலைதூக்கியுள்ளது. இதனுற்தான் இங்குள்ள தமிழரிடையே ஆக்க இலக்கியப் படைப்பில் ஒரு தேக்கம் ஏற்பட்டுள்ளதென்று கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் வரலாற்று அடிப்படையிற் பார்க்கையில் தமிழர்கள் தங்களை ஆண்ட சங்க காலத்திலும் சோளர் காலத்திலும் படைத்த உன்னத இலக்கியங்களை, தாம் அரசியலில் வீழ்ச்சியுற்ற நிலையில், பிற இனத்தவரான களப்பரரும் பல்லவர்களும் ஆண்ட காலப்பகுதியில் படைக்க முடியவில்லை. ஆகவே ஈழத்தில் தமிழில் நல்ல படைப்புகள் தோன்ற வேண்டின் தமிழர் தம்மை ஆளுகின்ற ஒரு அரசியல் அமைப்பு உருவாக வேண்டும் என்று கூறினார். இந்நிலை உருவாகும் வரை பல எதிர்ப்புக்களிற்கிடையில் பொருளாதார நெருக்கடிகளுக்கிடையில் சில நல்ல இலக்கியங்களை வெளிக்கொணர்பவர்கள் கூட தொடர்ந்து அவற்றைத் தமிழிற் படைக்கமுடியுமோ என்பது பெரும் கேள்வியாகவே விளங்குகிறது என்றார்.

ஈழவேந்தன் அவர்கள் தொடர்ந்து கூறுகையில் "தென் இந்தியச் சூழ்நிலையிலிருந்து எம்மை யாம் விடுவிக்க விரும்புகிறோம்" என்று திரு. சிவதம்பி அவர்கள் தன் பேச்சின் ஊடே செப்பிய கருத்தினை வன்மையாகத்தாக்கியதோடு அவர்கள் தென் இந்திய திரைப் பட நடிகர்—நடிகைகளான எம். ஜி. ஆர், சிவாஜிகணேசன், ஜெயலலிதா, கே. ஆர். விஜயா ஆகியோரின் செல்வாக்கினல தமிழக சஞ்சிகைகளின் தரம் தாழ்ந்துவிட்டதென்றும், அவற்றினல் பாதிக்கப்படுகிறோம் என்றும் கூக்குரல் இடும் திரு. சிவத்தம்பி போன்ற எழுத்தாளர்கள் நீலா நாராயணன், துரைராயா மற்றும் சிங்கள நடிகர்கள், நடிகைகள் பற்றி பக்கம் பக்கமாக மல்லிகை அஞ்சலி, கற்பகம், ரோயா, ரோயாப்பூ போன்ற ஈழத்துச் சஞ்சிகைகளில் கட்டுரைகள் வரையப்படுவது பற்றி—படங்கள் வெளிவருவது பற்றி ஏனோ அமைதிகொள்கிறார்கள். ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு நீங்கள் காட்டும் மாற்று மருந்து இதுதானு என்று குடைந்தார். தமிழ் இலக்கிய வளத்தை தென் இந்திய நடிக நடிகைகள் பாதிக்கக்கூடாது, ஆனல் ஈழத்து நடிக நடிகைகள் பாதிப்பது தவறில்லை என்பது உங்கள் உள் நோக்குப்போலும் என்று மேலும நகைச்சுவையோடு கிண்டல் செய்தார்.

ஈழவேந்தன் அவர்கள் தன் கருத்தை தொடர்ந்து தெரிவிக்கையில் இன்றைய ஈழத் தமிழரின் இக்கட்டான சூழ்நிலையில் தென்னகத்திற்கும் எமக்கும் உள்ள மொழி, கலை பண்பாட்டுத் தொடர்பை துண்டிப்பது தற்கொலைக்கு ஒப்பான செயல் என்று ஏதுக்கள் கொண்டு எடுத்து இயம்பினார். தென் இந்திய ஆதிக்கம் பற்றியும் அங்கலாய்க்கும் திரு. சிவத்தம்பி அவர்களே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினல் எம் தமிழ் மண் வளம் சிங்கள மண்வளமாகவும் எம் செந்தமிழ் மொழி வளம் வெறி கொண்ட சிங்களத்தினிப் பினுல் எம் கண்முன்னுலேயே சிங்களமயமாகவும் சிதறுண்டு சீரழிகின்றபோதும் ஒரு சொற்கூட எதிர்த்துப் பேசுகின்ற உள்ளத் தூய்மையோ — துடிப்போ — துணிவோ பெருத நீங்கள் தென் இந்திய ஆதிக்கம் பற்றிப் பேசு

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




க. கனகதாசன்,
புங்குடுதீவு.

கே: அண்ணுவை ஓர் சோசலிசவாதி என்று கூறும் வி. பொன்னம்பலம், குமாரசூரியர் கூட்டம் அவர் ஓர்சமஷ்டிவாதியென்பதை மட்டும் மூடி மறைப்பதேன்?

ப: தமிழ் மக்களைப் பேய்க்காட்ட!

ஃ

பொ. கலைச்செல்வி,
ஏழாலை.

கே: இந்தியாவிலிருந்து வரும் பெரும் பணக்கார நிறுவனங்களைச் சேர்ந்த பத்திரிகைகள் எல்லாம் தி. மு. க. வுக்கு எதிராகப் போர்க்கோலம் பூண்டுள்ளனவே; அவற்றின் பொய்ப்பிரசாரங்கள் மக்கள் மத்தியில் எடுபடுமா?

ப: தமிழரசுக்கட்சிக்கு எதிராக இங்கு சிங்கள முதலாளித்துவ ஏடுகள் தீவிர பிரசாரம் செய்தன. அதனுல் எல்லாம் தமிழரசுக்கட்சியை வீழ்த்த முடியவில்லையே. அதுபோலவே தி. மு. க. வை வீழ்த்த முதலாளித்துவ ஏடுகளால் ஒரு போதும் முடியாது!

கே: இப்போது நடைபெறும் தேர்தலில் இந்திரா அரசாங்கம் பதவிக்கு வராவிட்டால்...!

ப: இந்தியாவில் ஜனநாயகம் என்பது கேள்விக்குறியாகிவிடும்!

ஃ

தமிழழகன்,
பருத்தித்துறை.

கே: அரசியல் நிர்ணய சபையை ஏன் தமிழரசார் பகிஷ்கரிக்கக் கூடாது?

ப: தமிழ் மக்களின் சார்பில் அனைத்துத் தமிழ்க்கட்சிகளாலும் கூட்டாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒன்பது அம்ச குறைந்த பட்சக் கோரிக்கையை அரசியல் நிர்ணயசபை ஏற்றுக்கொள்ளத் தவறினுல், சபையை பகிஷ்கரித்து வெளியேறுவார்கள்!

ஃ

ஞா. பாலசிங்கம்,
சண்டிலிப்பாய்.

கே: மட்டுநகர் பா. உ. திரு. இராசதுரை குறுகிய மனப்பான்மையுடையவரென்று வி. பி.யின் வால்கள் கூறுகின்றனரே! இதற்கு என்ன பதில் கூறுகிறீர்கள்?

ப: தமிழ், தமிழினம், தமிழ்நாடு வாழ வேண்டுமென்று நினைப்பவர்கள் கம்யூனிஸ்டுகளின் கண்ணேட்டத்தில் குறுகிய மனப்பான்மையாகப் படுவது ஒன்றும் ஆச்சரியமில்லையே! தாய் பிச்சை எடுக்க கும்பகோணத்தில் அன்னதானம் செய்பவர்களாயிற்றே இந்தக் கம்யூனிஸ்டுகள்!

ஃ

எஸ். எஸ். ஆர்.,
ஆனைக்கோட்டை.

கே: நேர்மை, பொறுமை, கடமை ஆகிய முக்குணமுடைய ஒருவனின் எதிர்காலம் எவ்வாறிருக்கும்?

ப: வெற்றிப் பாதையில் போய்க்கொண்டிருக்கும்!

கே: வல்வையில் நடந்த நாற்கட்சிகளின் ஒற்றுமை மாநாட்டின் ஒன்பது அம்சக் குறைந்த பட்சக் கோரிக்கைகளை அரசு கொடுக்க மறுக்கும்பட்சத்தில் தமிழ்ப் பகுதிகளில் அரசியலையே பகிஷ்கரித்தால் தமிழரசு கிடைக்குமா?

ப: பகிஷ்கரிப்பதால் மட்டும் கிடைக்காது—தமிழரசு பெறும்வரை உரிமைப் போராட்டத்தில் தீவிரமாக குதிக்க வேண்டும்!

கே: வேலணையில் நடந்த தமிழ்... புறக்கணிப்பு கண்காட்சியை 'ராஜதுரோகம்' என்று யாழ் எம். பி. ஒருவர் கூறினராமே? அவர் யார்? 'காவடியா? அம்பலமா?

ப: காவடியார்தான்!

பொ. துரைராஜா,
திருகோணமலை.

கே: திருகோணமலையில் தியாகி நடராஜன், தியாகி இராஜவரோதயம் ஆகியவர்களின் சிலைகள் வைக்கப்படுமா?

ப: திருகோணமலை மக்கள் மனது வைத்தால் இது நடப்பது அப்படியென்ன முடியாதகாரியமா?

ஃ

ராஜன்,
காரைநகர்.

கே: எங்கள் எம். பி. தேர்தல் வழக்கு வென்றதால் ஈழத்துச் சிதம்பரத்திற்கு காவடி எடுத்தார். அப்பீலிலும் வென்றால்...?

ப: திருப்பதியில் மொட்டையடித்து நாமம் போட்டுக்கொள்ளக்கூடும்!

ஃ

க. ஜெயானந்தன்,
மாதகல்.

கே: சோசலிசத்தின் மூலம் இலங்கை முன்னேற்றமடைய இடமுண்டு என்று நான் கூறுகிறேன்? அது பற்றி தங்கள் கருத்து என்ன?

ப: உண்மைதான்; ஆனுல் எல்லா இனங்களுக்கும் சமதர்மம் வழங்கும் சோசலிசமாக அது இருக்கவேண்டும்.

ஃ

க. யோகநாதன்,
நெடுந்தீவு மேற்கு.

கே: ஏன் திருமணம் செய்வது?

ப: ஆயுள் தண்டனையை அனுபவித்துத் தீரவேண்டியிருப்பதால்!

கே: அணில் எப்படி வளர்ப்பது!

ப: யாராவது நடிகையிடம் கேளுங்கள்!

ஃ

எம். கே. தம்பி,
பருத்தித்துறை.

கே: இலங்கைப் போக்குவரத்து சபை பேருந்துகளில் சிங்கச் சின்னம் போடுவதும் பின்பு நிறம் மாற்றுவதும் தான் தலைவரின் வேலையா?

ப: சுளைசுளையாக வாங்கும் சம்பளத்துக்கு இதையாவது செய்யவேண்டாமா என்ன?

ஃ

சி. பெ. மனோகரன்,
நுணவிலொடை.

கே: வி. பொன்னம்பலமும் அமைச்சர் குமாரசூரியரும் தரப்படுத்தல் என்னும் பொருள்பற்றி விவாதிக்க முன்வராத காரணமென்ன?

ப: தமது தகிடுதத்தம் அம்பலமாகி விடும் என்ற அச்சம் தான்!

ஃ

இ. தங்கராசா,
வ/புதுக்குடியிருப்பு

கே: சி. அருளம்பலத்தின் பித்தலாட்டத்தைப் பார்க்கும் நல்லூர் தொகுதி மக்கள் என்ன நினைப்பார்கள்?

ப: சிமோன் சிமோல்தான் என்று நினைப்பார்கள்.

ஃ

கா. சொக்கலிங்கம்,
கட்டுப்பெத்தை.

கே: தளபதி அமிர்தலிங்கம் அவர்கள் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிருர்?

ப: தமிழுரிமைப் போராட்டத்துக்கு தமிழ் இளைஞர் படையை சரி பார்த்துக் கொண்டிருக்கிருர்!

த. செல்வராசா,
புங்குடுதீவு-6

கே: வடக்கு கிழக்கு மக்கள் சோசலிசப் பாதையில் செல்லத் தீர்மானித்து விட்டார்கள் என்று சிறிமா அம்மையார் எப்படி கண்டு பிடித்தார்?

ப: குமாரசூரியரும், வி. பொன்னம்பலமும் மற்றும் வால்பிடிகளும் கொடுத்த தவருன தகவலைக் கொண்டு! வடக்கு கிழக்கு மக்கள் வெறும் சோசலிசப் பாதையில் அல்ல—சோசலிச சமஷ்டி பாதையில் செல்லத் தீர்மானித்து 15 ஆண்டுகளாகிவிட்டன என்பதை அம்மையார் உணர வேண்டும்!

வி. சிவராசா,
புங்குடுதீவு-6.

கே: காங்கிரசை சேர்ந்தவரும் மூர்த்திகளும் குருவை மிஞ்சிய சீடர்களாக இருப்பதன் காரணம் என்ன?

ப: குருவின் (அதாவது தலைமைப்பீடத்தின்) கையாலாகாத்தனம் தான் காரணம்!

ஃ

டி. கே. இராஜமாணிக்கம்,
அட்டன்.

கே: மக்கள் அரசாங்கம் காட்டும் வழிக்கும் மார்க்சீயம் காட்டிய வழிக்கும் ஒற்றுமை உண்டா?

ப: மார்க்சீயம் இறுபான்மை இனத்துக்கும் சம உரிமைவழங்கும்படி போதிக்கிறது — மக்கள் அரசாங்கமோ மார்க்சீயத்தின் பேரைச்சொல்லி தமிழினத்தை அழித்தொழிக்க முனைகிறது. கார்ல் மார்க்சின் கல்லறை இதைக்கண்டு கண்ணீர் வடிக்கிறது!

ஃ

வே. பரமகுரு,
சாம்பல்தீவு,

கே: அண்மையில் வல்வெட்டித்துறையில் நடந்த தமிழ்க் கட்சிகள் ஒற்றுமை மகாநாட்டையும் அதிற் கொண்டுவந்த முடிவுகளையும் (தமிழ்) காங்கிரஸ் எம். பி. க்கள் மூவரும் ஆதரிக்கின்றனரா?

ப: ஆதரிக்கப்போவதில்லை என்று கூறியுள்ளனர் தியாகராசாவும் அருளம்பலமும்! ஆனந்தசங்கரியோ மௌனம் சாதிக்கிருர்!

ஃ

சி. நடராசா,
மீசாலை வடக்கு.

கே: தமிழ்த் துரோகிகள் வரிசையிலே எம். ஸி. சுப்பிரமணியத்தையும் சேர்க்கலாமா?

ப: ஆளுங்கட்சிக்கு வால் பிடிப்பவன் எவனே அவன் தமிழ்த் துரோகிதான்.

கே: 'சிமோல்' அருளம்பலத்தை ஏன் தெரிவு செய்தோம் என்று இப்போதாவது நல்லூர் மக்கள் சிந்திப்பார்களா?

ப: சிந்திப்பது மட்டுமல்ல விட்ட தவறுக்காக இப்போது இரத்தக் கண்ணீர் வடிக்கிருர்கள் நல்லூர் மக்கள்.

ஃ

குணசீலன்,
கந்தானை.

கே: தனியாட்சிக் கோரிக்கையில் சிங்கள மக்களுடன் ஐக்கியப்பட்டு மேல், தென் மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் நிலை என்ன? தனியாட்சியின் கீழ் அவர்கள் எவ்வாறு வாழ்வு பெறுவது?

ப: தனியாட்சி கேட்பவர்களிடம் இக்கேள்வியைக் கேளுங்கள் நாம் கேட்பது தனியாட்சியல்ல; தன்னுட்சி!

ஃ

சி. கனேசலிங்கம்,
திருகோணமலை.

கே: அரசாங்கத்துடன் சேரத் துடிக்கின்ற சில எம். பி. க்கள் தமிழ் கட்சித் தலைவர்களின் ஒற்றுமை மாநாட்டுக்கு ஏன் வரவில்லை?

ப: ஒற்றுமைக்கு உலை வைப்பவர்கள் எப்படி ஒற்றுமை மாநாட்டுக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியும்?

ஃ

கே. கே. என். கே.
நீர்கொழும்பு.

கே: தினபதி ஆசிரியர் தற்பொழுது சார்ந்திருக்கும் கட்சி என்ன கட்சி.

ப: தமிழ்துரோகக் கட்சி!

ஃ

க. ஜெயானந்தன்,
மாதகல்.

கே: சோசலிசத்தின் அடிப்படைத் தத்துவம் யாது?

ப: எல்லோருக்கும் 'சமதர்மம்'!

கே: இன்றைய அரசாங்கத்தின் முதல் நோக்கம் என்ன?

ப: தமிழ் பேசும் மக்களை சோசலிசப் போர்வையின் கீழ் அழித்தொழிப்பது!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194ஏ, பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு—12

## எச்சில் தமிழன் நீ

—தாமரைத் தீவான்—

விடுவிடு என்னை விடுதலை வேண்டும்
வேண்டேன் வேறென்றும்
எடுஎடு கையை இரண்டினிலொன்று
இன்றே பார்த்திடுவேன்
தொடுதொடு போரை தூக்கு மரத்தில்
தொங்கிடயான் வருவேன்
தடுதடு என்போர் சாவை அனுப்பின்
தமியேன் வரவேற்பேன்!

எண்ணமிருந்தால் என்பின்னுலே
இப்பொழுதேவாவா!
மண்ணுய்ப்போகும் வாழ்வென்ருல் நீ
மறைந்திடுவாய்போபோ!
அண்ணு வழியில் செல்வேன் என்னை
ஆர்தான் என் செய்வார்?
புண்ணுய்ப்போன நெஞ்சமிருந்தென்
போனுல் தானென்ன?

சொல்லிச்சொல்லிப் பார்த்தோம் பார்த்தோம்
தோல்வி பெருந்தோல்வி
தொல்லைப்பட்டுப்பட்டே இனிமேல்
சொல்லவும் ஏதுமில்லை
கல்லாய் மரமாய்க் கட்டிப் பொத்திக்
காலம் கழிப்பாயா?
அல்லாவிட்டால் அடியேன் பின்னே
அடிவைத்தெழுவாயா?

எப்படி முன்னமிருந்தாய் இப்போ
எப்படியுள்ளாய் நீ
இப்படியிழிவாய் இருந்திட வென்ருல்
என்னுல் முடியாது
அப்படியென்ருல் அணிஏன்—துணிஏன்?
அவிப்பதுவே போதும்
எப்படியாவது இருப்போமென்ருல்
இருந்து தொலைந்திடுவாய்!

அருமைத்தமிழன் செத்துப்போனுன்
அடிமைத் தமிழன் நீ!
எருமைத்தமிழன் இழிவுத்தமிழன்
எச்சில் தமிழன் நீ!
ஒருமைப்பாட்டை உடைக்குந்தமிழன்
உலுத்தத் தமிழன் நீ!
கருமைமனமும் கள்ளக்குணமும்
கடும்பொய்த் தமிழனும் நீ!

மொழிகிடையாது மண்கிடையாது
மொழி, மண் பெறுதற்கோர்
வழிகிடையாது சாதிகளாலே
வரவரவே தேய்ந்து
அழியப்போகும் நிலையைக்கண்டும்
அகமது பொங்காயேல்
ஒழிவாய் விரைவில் ஆமாம் ஆமாம்
ஒழிந்தால் தானென்ன?

இனிமேல் உன்னை எதுவும் கேளேன்
எப்படியோ நீபோ
எனினும் எந்தன் இனம் நீ என்றே
இவ்வளவும் சொன்னேன்
தனியாய் வாழுந் தமிழைப் போன்றே
தமியேனும் வாழ்வேன்
குனியுங் கொள்கை கூடாதஃதைக்
கொள்ளேன் ஒருபோதும்!

போவேன் தனியே புரிவேன் போரை
புறமுது இடவந்தால்
சாவேன் அல்லால் ...ளைப் பிடியேன்
தலையைக் குனியேன் ...ன்
கூவேன் அஞ்சிக் குடியேன் நஞ்சு
... ...ணு ...ய்
...வேன் ... ...ை
அடியேன ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கைதி ஆனது ஏன்?

கோவை-மகேசன்

'ம் ... நேரமாகிறது புறப் படுங்கள்'- இவ்வாறு அவச ரப்படுத்தினர் சி. ஐ. டி. அதிகாரி.

நான் அமைதியாக அவ ரைப்பார்த்து பின்வருமாறு கூறினேன்:—

"தந்தை செல்வாவின் பாசறையிலே வளர்ந்தவன் நான். ஆகையால் உங்களுக்கு எந்த சிரமமும் தரமாட் டேன். என்னைக் கைது செய் வதற்கு ஆயுதங்களோ படை பட்டாளங்களோ எது வுமே தேவையில்லை. நேர் மையையும் வாய்மையை யுமே நம்பி இருப்பவன் நான். என்னிடமுள்ள ஒரே ஆயுதம் எனது பேனாதான்! அவசரகாலச் சட்டத்தைப் போட்டு அந்த ஆயுதத் தையே இப்போது பறித்து விட்டிருக்கிறீர்கள். அரசாங் கம் சொல்வது போலச் செய்ய வேண்டியவர்கள் நீங்கள். எனவே உங்களுக்கு எந்த சிக்கலும் இல்லாது இதோ நான் உங்களுடன் கூட வருகிறேன். ஒரு இரண்டு நிமிட அவகாசம் கொடுங்கள். என் துணைவி யாரிடம் கூறிவிட்டு வந்து விடுகிறேன்..."

இவ்வாறு கூறி விட்டு— அந்தவார சுதந்திரனுக்குரிய ஆசிரியத் தலையங்கம் எழு தும் பணியையும் அப்படியே அரைகுறையில் விட்டுவிட்டு எனது விடுதிக்கு செல்வதற் காக எழுந்தேன். இதன் காரணமாகவே 6—11—70 சுதந்திரன் இதழ் 'எண்ணம்' பகுதியின்றி வெளிவந்தது என்ற உண்மையை வாசகர் கள் இப்போது புரிந்து கொண்டிருப்பார்கள்.

விடுதிக்கு நான் சென்ற போது என் துணைவியார் விசித்து விசித்து அழுதபடி நிற்கக்கண்டேன். அழுதழுது அவளது கண்களிரண்டும்கன் றிப்போயிருந்தன. சி.ஐ.டி. அதிகாரிகள் வந்தது-என்னை கைது செய்து கொண்டு செல்லவிருப்பது — யாவும் அவளுக்கு தெரிந்திருக்க வேண்டும்.

முதல் நாளே நான் அவளி டம் கூறிவைத்திருந்தேன்— சி. ஐ. டி. அதிகாரிகள் எந் நேரமும் வரலாம்; என்னைக் கைதுசெய்யலாம்; அதற் குத் தயாராக மனதை இப் போதே திடப்படுத்தி வைத் துக் கொள்ளும்படி. அப்போ தெல்லாம் எனக்குத் துணிச் சல் கூறியவளால் நான்கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்படும் நேரம் வந்த போது தாங்கிக் கொள்ள முடியவில்லை. பாவம், அவளு க்கு இது முதல் அனுபவம்! பெண் மனம் பேதை மன மல்லவா?

'அறிஞர் அண்ணு கூறியது போல இந்த நேரத்தில்தான் எதையும் தாங்கும் இதயம் நமக்கு வேண்டும். தைரிய மாகவிரு. எனக்கு எதுவும் இல்லை—என் தொழிலுக்கு பெருமை சேர்க்கவும், இயக் கத்துக்கு புகழீட்டவும்தான் நான் கைதியாகிறேன். கண்ணைத்துடைத்து விட்டு, சிரித்தபடி என்னை வழிய னுப்பு, என்று கூறி என் துணைவியாரைத் தேற்ற முயன்றேன்.

நான் என் மனைவியுடன் தனிமையில் பேசுவதைக் கூட சி. ஐ. டி. அதிகாரிகள் விரும்பவில்லைப் போலும்! அறைக்குள்ளும் நுழைந்து எனக்கு 'பந்தோபஸ்து' தந் தார்கள்.

துணைவியாரிடமிருந்தும் ஏனைய அலுவலக நண்பர் களிடமிருந்தும் விடைபெற் றுக் கொண்டேன்.

அப்போது...

எனது கெழுதகை நண்ப ரும் இளம் வழக்கறிஞரு மான இரா. எஸ். சி. விவே கானந்தன் வந்துசேர்ந்தார். நண்பர்விவேகானந்தன் இரு க்கிறாரே, அவரைப்பற்றியும் ஒரு சில வார்த்தைகள் இங்கு கூறிவைக்க வேண்டும்.

கடுகு சிறிதானாலும் காரம் பெரிது என்று கூறுவார்களே அது நண்பர் விவேகானந்த னுக்கு நூற்றுக்கு நூறு பொருத்தமானதாகும்; பார்வையில் 'கடுகு' போல ஒல்லியாக காணப்படினும் நுட்பமான சட்ட அறிவு படைத்தவர். அவர் வழக் கறிஞர் தொழிலில் ஈடுபட்டு ஆறுமாதங்கள்கூட இன்னும் ஆகவில்லை. இதற்குள் தனக் கென ஓர் இடத்தைப் பிடித்து, வழக்கறிஞருலகில் நேர்மைமிக்கவர், நல்லவர் என்ற பாராட்டுகளை தட்டிக் கொண்டு விட்டவர் நண்பர் விவேகானந்தன்.

ஆனால் ஒரு நல்ல வழக்கறி ஞர் என்பதால் மட்டும் அல்ல—இன உணர்வும், மொழிப் பற்றும் நிறைந்த வர்; தமிழர் விடுதலை வெறி படைத்த இளைஞர்; என்பத னால் திரு. விவேகானந்தன் மீது எனக்கு ஒரு தனிப் பற் றும் பாசமும் உண்டு. ஆணித் தரமாகவும் தர்க்கரீதியாக வும் விஷயங்களை எடுத்து ரைக்கக் கூடியவர் நண்பர் விவேகானந்தன்.

தாளுடாவிட்டாலும், தன் தசையாடும் என்றபடி நான் கைது செய்யப்பட்டு அழை த்துசெல்லப்படும் நேரத்தில் நண்பர் விவேகானந்தனும் எப்படியோ அங்கு வந்து சேர்ந்துவிட்டார்.

எனது வழக்கறிஞராக, எனது நலங்களைக் கவனிக்க தானும் உடன் வருவதாக சி. ஐ. டி. அதிகாரிகளிடம் கூறினார் வழக்கறிஞர் விவே கானந்தன். அவர்களும் உடன்பட்டனர்.

நான் பொலீஸ் வானில் ஏறிக்கொண்டேன். என்னு டன் நண்பர் விவேகானந்த னும் ஏறிக்கொண்டார். எங் களைச் சுற்றி சி. ஐ. டி. அதி காரிகள் அமர்ந்திருந்தனர். முன்னும் பின்னும் சி. ஐ. டி. வான்கள் பாதுகாப்பாக வர நான் அமர்ந்திருந்த வான் நடுவில் வர, சுதந்திரன் அலு வலகத்திலிருந்து கொள்ளுப் பிட்டியிலுள்ள சி. ஐ. டி. பொலீஸ் தலைமை நிலையத் திற்கு புறப்பட்டோம்!

நான் 'கைதியாகி' சென்று கொண்டிருந்த வான் காலி முகத்திடல் வழியாகச் சென்று கொண்டிருந்தது— இதமான காற்று என் உட லுக்கு சுகமூட்டியது. ஆனால் என் இதயமோ 15 ஆண்டு களுக்கு பின்னோக்கி சென்று- அந்தக் காட்சியை—ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் ஆரம்பமான அந்தப் புரட்சி திருநாளை— அசைபோட்டு பார்த்துக் கொண்டிருந்தது.

ஆம், 1956ம் ஆண்டு ஆனி ஐந்தாம் நாள்.

ஈழத் தமிழர்களின் இன விடுதலைப்போராட்டத்துக்கு பிள்ளையார் சுழி போடப் பட்ட பொன்னாள்!

முரசறைந்து அரசிருந்த முத்தமிழ் அன்னையை அரிய ணையிலிருந்து அகற்றி சிங்க ளச் சிறுக்கிக்கு முடிசூட்டும் தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்து இந்நாட்டில் தனிச் சிங்கள ஏகாதிபத்தி யத்துக்குச் சிங்கள இனவெறி யர்கள் வித்திட்ட கரிநாள்!

அன்று அந்த அநாகரிக மான—அசுரத்தனமான— காட்டுமிராண்டித்தனமான சிங்களம்மட்டும் சட்டத்தை எதிர்த்து கருணையே உருவா ன தந்தை செல்வாவின் தலை மையிலே காலிமுகத் திடலில் கன்னித் தமிழ் காத்திட தமி ழர்கள் அறப்போரில் ஈடுபட் டிருந்த காட்சி என் கண் முன்னால் இன்னும் பசுமை யாக இருக்கிறது!

வேறு யாரும் செய்யாத சாதனையை — சத்தியாக்கிர கப் போராட்டத்தில் காந்தி யார்கூட செய்யாத சாத னையை-இந்நாட்டில் செய்து காட்டினார் நமது தந்தை செல்வா அவர்கள் அன்று!

காந்தியார் ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிரான தமது சத்தியாக்கிரகப் போராட்டத்தினை இந்தியா வில் நடத்தினாரே தவிர ஆங் கிலேயரின் சொந்த நாடான இங்கிலாந்தில் நடாத்த முன் வரவில்லை.

ஆனால் நம்முடைய தந்தை செல்வா அவர்களோ, சிங்க ளவர் பெரும்பான்மையாக வாழும் சிங்களப் பிரதேச மான கொழும்பு மாநகரி லேயே நாடாளுமன்றத்தின் முன் சிங்கள ஆதிக்கத்தை எதிர்த்து அறப்போர் நடா த்தி ஓர் புதிய சாதனையை அன்று நிலைநாட்டினார் என் றால் என்னே தந்தையின் துணிச்சல்!

அன்றைய சத்தியாக்கிர கப் போராட்டத்தில் அமை தியுடன் அமர்ந்து-மொழி எங்கள் பிறப்புரிமை - தமிழு க்கு உத்தியோக மொழி அந் தஸ்துவேண்டும் - என்பன போன்ற கோரிக்கைகளுடன் சத்தியாக்கிரகப் போராட் டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் தொண்டர்கள் மிருக வெறி பிடித்த சிங்களக் காடையர் களால் ஈவிரக்கமின்றி தாக் கப்பட்டனர்!

மறைந்த தியாக மாமலை - கோப்பாய்க் கோமான் அம ரர் வன்னியசிங்கம் அவர் களின் மேல்சட்டை கிழிக்கப் பட்டது! அவரது மூக்குக் கண்ணுடி, கைக்கடிகாரம் ஆகியன பறிக்கப்பட்டன. உருட்டி உருட்டி உதைக்கப் பட்டார்; அடித்து நொருக் கப்பட்டார் அந்த உத்தமர்! எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு கிழிந்தவேட்டிபனி யனுடனும் உறுதிமிக்க வச் சிர உள்ளத்துடனும் அவர் அமர்ந்திருந்த காட்சி என் மனதில் தோன்றுகிறது!

அதோ அவருக்குப் பக்கத் தில்-தமிழினத்தின் தானைத் தலைவன் - புதிய பரணி யெழுதிவரும் புலிவேங்கை - தன் எழுச்சிமிகு சொற் களால் இளைஞர்களின் இத யங்களில் குடியேறிவிட்ட தமிழ்ச் சிங்கம் - அமிர்தலிங் கம் காடையனொருவனின் கல் லால் நெற்றி பிளந்து இரத்த மொழுக மொழுக அறப் போர் நடத்துகிறார்!

அடி வயிற்றில் மூங்கில் தடி யால் தாக்குண்ட நேரத்தி லும் 'மூத்தமிழே செத்தா லும் உனைக் காப்பேன்' என்று உறுதிகூறி புன்முறு வலுடன் அமர்ந்திருக்கிறார் [illegible] வரின் நாடி நரம்புகளை தட விக் கொடுத்தும், எரிதமி ழால் எதிரிகளின் விலா வொடித்தும் வரும் முழுநில வாம் இராசதுரை விறல் வீரர் நாகநாதன், பருத்தித் துறை துரைரத்தினம், பட் டிருப்பு இராசமாணிக்கம் போன்ற தலைவர்கள் அமர்ந் திருந்து போர் நடத்தும் அற்புதக் காட்சி மனக் கண் முன்னே, தெரிகிறது!

ஒரு தமிழ்த் தொண்டரின் காதை அறுத்தெறிகிறார்கள் சிங்களக் காடையர்கள்! இன்னோர் தொண்டருக்கு சிறுநீரைப் பருக்க எத்தனிக் கிறார்கள்! என்ன அக்கிரமம், கொடுமை நிறைந்த காட்சி இது!

காப்பிலிகள் நிறைந்த ஆப் பிரிக்காவிலும் நடக்கமுடி யாத காட்சிகளையெல்லாம் நம் சிங்கள சகோதரர்கள் இங்கு நடத்திக்காட்டினார் கள் அன்று!

இந்த அட்டூழியங்களை யெல்லாம் கண்டுகொண்டே அமைதியுடன் சாந்தமூர்த்தி யாக அமர்ந்திருக்கிறார் தந்தை செல்வா அவர்கள்! தம் கண்முன்னே தம் அரு மைப் புதல்வர்கள் சுழலச் சுழல அடித்து வீழ்த்தப்பட்ட போதும் அந்த திருமுகத்தில் எவ்வித கலக்கமோ சல னமோ காணப்படவே இல்லை!

அன்று ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை கண்ணீர் வியர்வை, இரத் தத்தால் தொடக்கி வைத் தது இலங்கைத் தமிழரசுக் கட்சி!

உலக நாடுகளின் கவ னத்தை யெல்லாம் ஈழத் தின் பால் திருப்பி இங்குள்ள தமிழர்களின் நிலையை எல் லோரும் அறிந்திடவும் தமிழ் மக்களின் உறுதியை அனைத் திலங்கையும் அறிந்திடவும் வழி வகுத்தது இந்தப் போராட்டம்தான் என்ப தில் துளியும் ஐயமில்லை.

அன்று தொடங்கப்பட்ட இந்தப் போராட்டப் பாதை யில் துணிச்சலுடன் கடந்த 15 ஆண்டுகளாக சென்று கொண்டிருக்கும் ஈழத்துத் தமிழ்பேசும் மக்களுக்கும் தமிழின விடுதலை இயக்க மாம், தமிழரசுக் கட்சிக்கும் இடையில் எத்தனை எத்தனை சோதனை! எத்தனை எத்தனை துன்பங்கள்!

அத்தச் சோதனையில் ஒரு கட்டம்தான் இன்று எனக்கு ஏற்பட்டுள்ள நிலையும் என்று எண்ணிக்கொண்டேன். ஆம், இது எனக்கு ஒரு சத்திய சோதனையேதான்!

இவ்வாறு நான் எண்ண மிட்டபடியிருந்தபோது திடீ ரென்று பொலிஸ் வான் நின்றது.

"சி.ஐ.டி பொலிஸ் தலைமை நிலையம் வந்துவிட்டது: இறங்குங்கள் என்றார் சி.ஐ.டி அதிகாரி.

நான் வானிலிருந்து இறங்கி வழக்கறிஞர் விவே கானந்தனுடன் உள்ளே சென்றேன்.

என்னை உட்காரச் சொல் லிய சி.ஐ.டி ஏ.எஸ்.பி மீண் டும் ஒரு தடவை என்னிட மிருந்து வாக்கு மூலம் பெற்றுக் கொண்டார்.

ஒரு பத்திரிகைக்காரன் என்ற முறையில் அங்கி ருந்த சி.ஐ.டி. அதிகாரிகள் சிலரிடம் பேச்சுக் கொடுத்து நான் பிடுங்கிக் கொண்ட தகவலின் படி ஒரு குறிப்பிட்ட அமைச் சரின் நச்சரிப்பு தாங்க முடியாமலேயே என்னை கைதுசெய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்ட தென்பதைத் தெரிந்து கொண்டேன். பாவம் அவர்களை நொந்து பயனென்ன? எய்தவனி ருக்க அம்பை நோவா னேன்?

எஸ்.பி. (சி.ஐ.டி.) அவர் கள் பி.பகல் 2மணிக்கே வரு வாரென்றும் அதுவரை காத் திருக்கவேண்டுமென்றும் ஏ.எஸ்.பி. கூறினார்.

ஈழத்தமிழினத்தின் இதய உணர்ச்சியை எடுத்துரைத்து வருவதற்காக— நியாயத்தை எடுத்துரைத்து, அநியாயங் களைச் சாடி வருவதற்காக— நான் கைதுசெய்யப்பட்டு நான்கு மணி நேரங்கள் ஓடி விட்டன.

இப்போது பி.பகல் மணி இரண்டு ஆகிவிட்டது!

'சரி வாருங்கள் எஸ். பி. யிடம்...' இப்படிக் கூறி விட்டு மாடிப்படி வழியே எஸ்.பி.யின் அறைக்கு என்னை அழைத்துச் சென்றார், ஏ.எஸ்.பி. வழக்கறிஞர்விவே கானந்தன் வெளியே நிற்க நானும் ஏ.எஸ்.பியும்உள்ளே சென்றோம்.

புன்னகை தவழ என்னை வரவேற்றார் எஸ். பி. திரு. சேனநாயகா. (இவர் ஐ. ஜி. பி. திரு. சேனநாயகாவின் சகோதரர் என்பதை பின் னர் அறிந்து கொண்டேன்.)

"...வாருங்கள் சாப்பிட்டு விட்டீர்களா?" இப்படிக் கேட்டார் எஸ். பி.

'இன்னும் இல்லை' என் றேன் நான்!

உடனே தம் சட்டைப் பையிலிருந்து பத்து ரூபா நோட்டை எடுத்து ஒரு சி. ஐ. டி. அதிகாரியிடம் நீட்டி உணவு எடுத்துவரும்படி உத் தரவிட்டு மேலே தொடர்ந் தார் எஸ். பி.

"ரூபா நோட்டுக்கள் மாற்றப்பட்டது சம்பந்த மான உங்கள் குறிப்பிட்ட சுதந்திரன் செய்தி பற்றி அரசாங்கம் உண்மையை அறிய மிகவும் ஆவல்கொண் டுள்ளது. பிரதமர் இதில் அளவு கடந்த ஆர்வம் காட்டு கிறார். உங்களைக்கைதுசெய்து தண்டிக்க வேண்டுமென்ற நோக்கம் எமக்கில்லை. குறி த்த செய்தி கிடைத்த விதத்தை—அதாவது செய்தி தந்தவரது விபரத்தை மட் டும் கூறிவிடுங்கள் — நீங்கள் போகலாம்..." என்றார் எஸ். பி.

"மன்னிக்கவும். தகவல் எப்படிக் கிடைத்தது என்ற விபரத்தை எந்தப் பத்திரி கைக்காரனுமே வெளியிடு வதில்லை. இது ஜனநாயக நாடுகளில் எல்லாம் பத்திரி யாளர் பின்பற்றிவரும் ஒரு மரபு ஆகும். இந்த மரபை மீறி பத்திரிகைத் தொழி லுக்கும் பத்திரிகையாளர் களுக்கும் ஒரு கறையை ஏற் படுத்த நான் முன்வர மாட் டேன். பத்திரிகை உலக மரபை நான் மீறுவேனாகில், இந்தத் தொழிலுக்கே நான் இலாயக்கற்றவனாகி விடு வேன். எனவே உங்கள் கோரிக்கையை நிறைவேற்ற முடியாததற்கு வருந்து கிறேன்......"—இவ்வாறு அமைதியாக பதிலளித்தேன்- எஸ். பி. தலையை அசைத் தார். பின் கூறினார்:- "நீங் கள் கூறுவது உண்மை. சாதாரண நேரங்களில் பத் திரிகை மரபுகளை நீங்கள் மீறக்கூடாதுதான். அதை ஒப்புக்கொள்கிறேன்; ஆனால்

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதுவதில்லையா?

## இதை நிரூபித்தால் பதவி துறக்கிறேன்!

### தியாகராசாவுக்கு இரத்தினம் பகிரங்கச் சவால்!

நீங்கள் விடுத்துள்ளதாக ''தமிழரசாரே தமிழைப் புறக்கணிக்கிறார்கள்'' எனுந் தலைப்புடனும் உங்கள் படத்துடனும் ஓர் அறிக்கை 16-2-71 தினபதி இதழில் வந்துள்ளது. தினபதி செய்திகளைத் திரித்தும் கூட்டியும் குறைத்தும் வெளியிடுவதிலும் புரட்டையும் பொய்யையும் கூசாது பரப்புவதிலும் கைதேர்ந்தது. எனவே, நீங்கள் அந்த அறிக்கையினைத் தினபதிக்குக் கொடுத்தீர்களா என்பதனையும் அந்த அறிக்கையில் ''பண்டிதர் இரத்தினம் உட்பட தமிழரசுக் கட்சி எம்.பீ.க்கள் அனைவரும் அரசாங்க அமைச்சர்களுக்கு ஆங்கிலத்தில்தான் கடிதம் எழுதுகிறார்கள். ஒரு வரிகூடத் தமிழில் இல்லை; நாடாளுமன்ற செயலாளருக்கும் பண்டிதர் இரத்தினம் ஆங்கிலத்தில் கடிதம் எழுதுகிறார்'' என்று இருக்கும் பகுதியையும் நீங்கள் அப்படியே கொடுத்தீர்களா என்பதனையும் அறிய விரும்புகிறேன் நான் உங்களை 21-2-71இல் பிரதிநிதிகள் சபையில் சந்தித்த பொழுது இதுபற்றி நேரில் கேட்டேன். நீங்கள் மறுமொழி கூறாமல் போய்விட்டீர்கள்.

பழைய கேண்மையாலும் ஆசிரியராக — அதிபராக இருந்த நீங்கள் வேண்டுமென்றே ஆராய்வின்றியோ பொய் பேசமாட்டீர்கள் எனும் நம்பிக்கையாலுமே இதனை நான் அறிய விரும்புகின்றேன். அன்றியும் பொய்யும் புரட்டும் பேசுகிறவர்களை ஊரறிய உலகமறியச் சந்தியில் நிறுத்தி விளக்கம் கேட்டு உண்மையை நிலை நாட்டவேண்டியது எம்.ஏ. பட்டம் பெற்ற உங்களையும் என்னையும் போன்ற ''படித்தவர்களின்'' மக்கள் பிரதிநிதிகளின் கடமையுமாகும்.

உங்கள் அறிக்கையென்று சொல்லப்படும் அந்த அறிக்கையில் ''பண்டிதர் இரத்தினம் உட்பட....அமைச்சருக்கு ஆங்கிலத்தில் தான் கடிதம் எழுதுகிறார்கள். ஒருவர்கூடத் தமிழில் எழுதுவதில்லை'' என்று கூறப்பட்டுள்ளது. இதனை நீங்கள் உண்மையென நிறுவமுடியுமா?

நீங்களோ தினபதி ஆசிரியரோ உண்மையென நிறுவினால் நான் எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கிறேன். நீங்கள் நிறுவ முடியாதென்றால் உங்கள் பா.உ. பதவியைத் துறக்குமாறு நான் கேட்கவில்லை. தினபதி எழுதியபடி உங்களுக்குக் கிடைக்கப் போகும் மந்திரி பதவியை அனுபவிக்கும் வாய்ப்பை நான் கெடுக்கவிரும்பவில்லை. நான் அமைச்சர்களுக்கு தமிழில் கடிதங்கள் எழுதவில்லை என்று முழுப் பொய்யை பரப்ப முற்படுபவர்கள் யாராயிருப்பினும் அவர்கள் பொய்யர்கள்—புரட்டர்கள்—பச்சோந்திகளே இவர்களின் பச்சைப் பொய்யை மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்துவதற்கு நான் தயங்கமாட்டேன். உங்கள் மறுமொழியை விரைவில் அனுப்பி உதவுக.

பண்டிதர் க. பொ இரத்தினம் பா. உ. தியாகராசாவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கேட்டுள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் கூட்டணியினரின் குட்டு அம்பலம்!

### குமாரசூரியருக்கு வால் பிடிப்பதில் பத்திரிகைகள் போட்டா போட்டி!

### கல்வி அமைச்சர் கொடுத்த தலை அடி!

அமைச்சர் குமாரசூரியருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினை உருவாக்குவதற்கு அதிகாரம் எதுவும் கொக்கப்படவில்லை எனப் பதில் கல்வி அமைச்சர் பாராளுமன்றத்தில் மறுமொழி கூறிய பின் மீண்டும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைப் பற்றி ஆதாரமற்ற செய்திகளைச் சிலபத்திரிகைகள் வெளியிட்டு 'விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை' என அலறுகின்றன.

அடுத்த ஆண்டிலாகுதல் பல்கலைக் கழகம் இயங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்ன? ஊறுகாவற்றுறைப் பிரதிநிதி திரு. கா. பொ. இரத்தினம் கேட்ட கேள்விக்குப் பல்கலைக் கழக நன்கொடை ஆணைக்குழுவிடமே இந்தப்பொறுப்பு ஒப்படைக்கப்புட்டுள்ளது எனப் பாராளுமன்றத்தில் பதில் கல்வி அமைச்சர் மறுமொழி கூறினார்.

இதற்குப் பிறகும் சூடு சுரணை இன்றி பரமேசுவராக் கல்லூரியில் பல்கலைக் கழகம் உருவாகும்; உத்தியோகப் பற்றற்ற கூட்டங்கள் நடத்தினோம் என்று கூறி மக்களை மயக்குவது வெட்கத்துக்கும் வேதனைக்கும் உரியது.

2-3-71ஆம் திகதி டெயிலி நியூஸ் பத்திரிகையில் பதியுதீன்மாமூத் வெளியிட்ட அறிக்கை இந்த எத்தர்களுக்குத் தலை அடி கொடுத்து விட்டது.

'Dr. Mohmmd announced that the three proposed universities would be set up within five years. their location and courses would be decided once the grant commission was set up.

இதுதான் கல்வி அமைச்சர் கூறியது,

'நிறுவப் படவிருக்கும் மூன்று பல்கலைக்கழகங்களும் ஐந்து ஆண்டுகளுள் நிறுவப்படும். இவை எங்கு நிறுவப்படும் என்ன பாடங்கள் கற்பிக்கப்படும் எனும் விடயங்களை நன்கொடை ஆணைக்குழு நிறுவப்பட்ட பின் தீர்மானிக்கும்'

இன்னும் இந்த ஆணைக்குழு நிறுவப்படவில்லை பசு சினைப்படமுன்னர் நெய்க்கு விலைபேசிப் பெருமை பெற விரும்பும் எத்தர்கள் கல்வி அமைச்சரின் அறிக்கைக்கு என்ன மறுமொழி கூறுவார்கள்? இவர்களுக்கு மானம் மரியாதை இருந்தால் கல்வி அமைச்சரைக் கொண்டு 'இந்த ஆண்டுக்குள் பரமேசுவராக் கல்லூரியில் பூரண பல்கலைக் கழகம் நிறுவப்படும்' என்று ஓர் அறிக்கையை வெளியிடச் செய்யலாமே! செய்ய முடியாதென்றால் வெறும் வாயை மெல்லாமல் வாயை மூடிக் கொண்டிருப்பது தமிழினத்துக்குச் செய்யும் தொண்டாகும்.

## இலங்கைத் தமிழ்பேசும் இஸ்லாமியர்

### வங்காள ரகுமானின் வழி செல்வார்களா?

### தமிழ்த்தாய் மன்றம் இப்படிக் கேட்கிறது!

'மத அடிப்படையில்— இஸ்லாமிய மதத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து அமைந்தநாடு பாகிஸ்தான். இரத்தம் சிந்தப்பட்டே இஸ்லாமிய பாகிஸ்தான் அமைந்தது. ஆனாலும் காலப்போக்கில் கிழக்கு பாகிஸ்தானில் உள்ள இஸ்லாமியர் தங்கள் இஸ்லாம் மதத்தைவிட வங்காளமொழியெ பெரிதெனக் கருதியதால் பாகிஸ்தானில் இருந்து பிரிந்து வங்காள மொழிபேசுவோருக்கென தனிநாடு ஒன்றை முஜிபர் ரகுமானின் தலைமையில் அமைக்கத் துடிக்கிறார்கள். இலங்கையில்—குறிப்பாக கிழக்கிலங்கையில் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு வாழும் இஸ்லாமியத் தமிழர் தங்கள் மதமான இஸ்லாமியத்திலும் அதிக மதிப்பை தங்கள் தாய் மொழியான தமிழுக்குத் தர முன்வருவார்களா?'

இவ்வாறு அனைத்திலங்கைத் தமிழ்க் கலாசார இயக்கமான தமிழ்த் தாய் மன்றத்தின் காவலர் காசி ஆனந்தன் அவர்கள் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார். அவர் மேலும் இவ்வறிக்கையில் கூறியிருப்பதாவது:—

''ஈழத் தமிழினம் மத வேறுபாடுகளை மறந்து — இந்து, கிருத்தவன் இஸ்லாமியன் என்ற வேற்றுமைகளைக் களைந்து — தமிழன் என்ற அடிப்படையில் ஒன்றுபட வேண்டும். தாய்மொழிதான் இறைவனை மனிதன் உணர முதலில் துணைபுரிகிறது. நாம் குழந்தைகளாக இருந்த போது முதலில் அம்மா தமிழைத்தானே [illegible] தமிழால் அல்லாவைப் பற்றியோ ஆண்டவனைப் பற்றியோ கூறி நம்மை வழிபடவைத்தாள். ஆகவே தாய்மொழிதான் அல்லாவையோ ஆண்டவனையோ நமக்கு அறிமுகம் செய்து வைத்த மொழி என்பதை நாம் மறந்து விடக்கூடாது;

''இந்துக்களுக்கு சமஸ்கிருதம் இறைமொழி என்று சொல்கிறார்கள். இஸ்லாமியருக்கு அரபு தேவமொழி என்பதையும் அறிவோம். ஆனால் நாம் குழந்தைகளாய் இருக்கும் போது இந்த மூன்று மொழிகளிலுமா நமது தாய் நமக்கு ஆண்டவனைப்பற்றிச் சொல்லித் தந்தாள்— இல்லையே!''

''வட இந்தியாவில் மகேந்திரா மன்னரைத் தலைவராகக் கொண்ட நேபாளம் ஒரு முழு இந்து ராஜ்யம்—ஆனால் இங்குள்ள இந்துக்களான நாங்கள் அந்தராஜ்யத்தைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை—காரணம்... அவர்களுடைய தாய்மொழி வேறு —எங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் எதுவித தொடர்புமே கிடையாது. ஆனால் பக்கத்திலுள்ள தமிழ் நாட்டில் அன்றாடம் நடைபெறும் 'அண்ணா அரசியல்' பற்றி நாங்கள் அறிய ஆவலுள்ளோராயும் துடிப்புள்ளோராயும் இருக்கிறோம்— தமிழக அரசின் ஒவ்வொரு நடவடிக்கையையும் ஆவலோடு கவனிக்கிறோம்— இது தானே இயற்கை உறவு'.

இந்து ராஜ்யமான நேபாளாத்துக்கும் இங்குள்ள எங்களுக்கும் அணுவளவு கூடத் தொடர்பில்லை — ஆனால் தமிழ் நாட்டுக்கும் எங்களுக்கும் இடையில் மானசிகத் தொடர்பு இருக்கிறது. இந்த உண்மையை ஈழத்திலுள்ள இஸ்லாமியர் உணர வேண்டும். கிழக்குப் பாகிஸ்தானின் தலைவரான முஜிபர் ரகுமான் இஸ்லாமிய ராஜ்யத்தை ஒதுக்கித் தள்ளி, வங்காள ராஜ்யம் காண விரும்புவதும் இந்த மொழியுணர்வு காரணமாகவே என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

மதத்தை விட மொழியைப் பெரிதாக மதியுங்கள் என்று நான் கூறுவதால் இஸ்லாமிய மதத்தை நான் தாக்குவதாக யாரும் கருதி விடக் கூடாது. இஸ்லாம் உலகில் உள்ள மிக உயர்ந்த மதங்களில் ஒன்று இலங்கையிலுள்ள இஸ்லாமியர் தங்கள் இஸ்லாமிய சமயத்தில் மலர்ந்த அரபு நூல்களையெல்லாம் தமிழில் மொழி பெயர்த்தும் உமறுப் புலவரைப்போல இனிய தமிழ் இஸ்லாமிய இலக்கியங்கள் படைத்தும் இஸ்லாத்தைத் தமிழ் மணங்கமழ வைக்க வேண்டும். இத்தகைய ஓர் ஒப்பில்லா மொழிப்பற்றே வங்காள மொழி மீது முஜிபர் ரகுமான் கொண்டுள்ளார்.'

இந்த உண்மைகளையெல்லாம்சிந்தித்து—தமிழ்மொழி —தமிழ்ப்பண்பாடு— தமிழ்க் கலாசாரம் என்ற அடிப்படையில் இலங்கை இஸ்லாமியர் ஏனைய மதத்தினரான தமிழருடன் ஒன்றுபடவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

'இலங்கையிலுள்ள இஸ்லாமிய இளைஞர்களை முஜிபர் ரகுமானைப் பற்றிச் சிந்திக்க வைக்கும் வகையிலும்— மொழிப்பற்றிலே தோய்க்கும் வகையிலும் இவ்வறிக்கை துணைபுரியுமானால் நான் எல்லையில்லா மகிழ்ச்சியடைவேன்.'

இவ்வாறு தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார் காசி ஆனந்தன்.

உயிர் தமிழுக்கு

## அம்மா!

அன்னையே! என்றன் தாயே!
அம்மா! நீ அடுத்தாரைப் போல்
தின்னவும் காலை நக்கித்
திரியவும் படைத்திடாமல்
என்னையேன் தமிழை எண்ணி
ஏங்கிடப் படைத்தாய்? இங்கே
உன்னரும் பிள்ளை நாளும்
உயிர்துடிக்கின்றேன் தாயே!

கும்பிட்டால் பல்லைக் காட்டிக்
குழைந்தால் நான் குனிந்து போனால்
நம்பிக்கையொடு மாற்றான் கால்
நக்குவேன் என நாணுது
தம்பட்டம் அடித்தால்—நானே
தாங்கலாம் பதவி கோடி!
வெம்பிப் போய் உலர்கின்றேன் யான்...
வீரமேன் கொடுத்தாய் தேவி?

பாரம்மா...... முன்னாள் என்னைப்
படுக்கையில் அருகே வைத்து
சேரனார் கதை நீ செப்பிச்
சிறியேனைக் கெடுத்ததாலே
பாரம்மா...மாற்றானுக்குப்
பணியான் உன்பிள்ளை—வீதி
ஓரமாய்க் கிடந்தும் காய்ந்தும்
உரிமைப்போர் நிகழ்த்துகின்றான்!

மானத்தின் வடிவே! என்னை
மகவாகப் பெற்ற தாயே!
தேனொத்த முலைப்பாலோடு
தீரத்தைத் திணித்த தேவி!
ஈனத்தை ஏற்கா நெஞ்சம்
எனக்களித் தவளே! அன்னாய்!
ஊனத்தின் உடல் வீழ்ந்தாலும்
உரிமைப்போர் நிறுத்தேனம்மா!

காசி ஆனந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்தை விடு தூது

**திருமதி. பாலேஸ்வரி நல்லரெட்டினசிங்கம்**

## அத்தியாயம் (7)

சிவகாமியின் நினைவு சிறுகச்சிறுகச் சரவணனை வாட்டிக் கொண்டேயிருந்தது. அவனது மனநிலையில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை சிவகாமியின் திருமணம் அநேகமாக நிட்சயமாகி விட்டதாகப் பலரும் கதைத்தது அவன் காதிலும் விழத்தான் செய்தது. மாப்பிள்ளைகூட அங்கு அடிக்கடி வந்து போய்க்கொண்டிருப்பதாகப் பேசிக் கொண்டனர். ஆயினும் அவன் மட்டும் இன்னும் அவரைத் தன் கண்ணுற்காணவில்லை.

ஒருநாள் இப்படித்தான் அவன் அழுது புலம்பிக் கொண்டிருநதபோது கனகசுந்தரம் அவன் பக்கத்தில் அமர்ந்து அவனைத் தேற்றிக் கொண்டிருந்தான். அந்நேரம் பார்த்து எதிர் வீட்டுப் பொன்னையா அவர்களை நோக்கி மிகவும் விரைவாக வந்து கொண்டிருந்தார். என்ன செய்தி கொண்டுவருகிருரோ என்ற ஆவலில் இருவம் அவரையே பார்த்து நின்றனர். அவர்களை நெருங்கிய அவர் அவர்கள் காதோடுகாதாக அவர்களுக்கு மட்டுங் கேட்கும்படியாக தெருப்படலையில் ஓடிப்போய்ப் பாருங்கள் என்ருர்: கனகசுந்தரம் அவர் வாய் மூடுவதற்குள்ளேயே அங்கு போய் விட்டான். ஆனுல் உடல் நலிந்து உள்ளங் குழம்பியிருந்த சரவணனே ஒரு அடி கூடப் பெயர்த்தெடுத்துவைக்க முடியாதவனுய் 'என்ன விடயம்...'? என்பது போல் அவரைப் பார்த்தான். 'ஓடு சரவணு... ஓடிப்போய் பார் மாப்பிள்ளை சிவகாமி வீட்டுக்கு வந்து கொண்டிருக்கிருர்:' என்று சொல்லி முடிந்தபோது சரவணனுக்குக் கதறி அழ வேண்டும் போலிருந்தது. ஆயினும் தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு தற்போது தன்னை நடைப்பிணமாக்கி விட்டிருக்கும் அழகி சிவகாமியை மணக்கப் போகிறவரை ஒரு முறை பார்த்துவிட வேண்டும் என்று மனந் துடியாய்த் துடித்தது. அதனுல் மெதுவாக எழுந்து இடுப்பில் இருந்த வேட்டியை இறுக்கிக் கொண்டே தெருப்படலையை நோக்கித் தன்னுல் இயன்றவரை வேகமாக நடந்தான்.

அவன் தெருவாயிலை அடைவதற்கும் முத்துக்குமாரன் அவர்கள் தெருப்படலையைக் கடப்பதற்கும் சரியாக இருந்தது. சிவகாமிக்கு மாப்பிள்ளையாக வரப்போகிறவர் இவர்தானு என்ற வினு அவன் மனதில் எழுந்தபோது அவனுக்கு அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. ஐயோ! பார்ப்பதற்கே முரடன்போற் தோற்றமளிக்கிருரே. இவரிடமா என் செல்லக் கிளி சிவகாமி சென்று வாழ்க்கைப்படப் போகிருள்...? இவரைப் பார்த்தாலே அவளது அமுத கலசம் போன்ற அழகிய விழிகள் அச்சத்தில் அல்லற்படும் எவ்வளவு அருமையாக வளர்த்து இப்படியொரு பெண்ணருமை தெரியாத ஒருவனிடம் அவளை அளிக்கப்போகும் அவள் அப்பா நிச்சயமாக நரகலோகத்திற்குத்தான் உரியவராவர். நரகத்தில் இருந்து அவர் தப்பவே முடியாது என்று கதறி அழும் சரவணனைத் தேற்றி விடுகிருர் பொன்னையா.

சரவணன் வாயிலில் நின்றபடி சென்றுகொண்டிருக்கும் முத்துக்குமரனையே பார்த்துக் கொண்டிருக்கிருன்: அவர்மேல் அவன் கோபந் திரும்புகிறது. ஆத்திரம் அழுகையா[illegible]ப பிரலாபித்து விடுமோ என்ற பீதியில் தன் உணர்ச்சிக்கு அணைபோட்டு விடு[illegible]ருன ஆயினும் அவன் உண[illegible]சி ஒரு கவிதையாக உரு[illegible]றது.

பெண்ணருமை தானறியாப்
பேதையர்க்குப் பெண்
கொடுத்தார்
மண்ணிலுள்ள காலம்
வருந்துதற்கே பெற்றெடுத்
தார்
கண்ணிலரித் தந்தைதமர்
கடுநரகிற் கேயுரியர்
எண்ணி யினைந்தேங்கி
யிருந்த பெரும் பயனென்
என்னுயிரை மாய்த்த
லியைவதாம் பைங்கிளியே

உடைந்த உள்ளத்துடனும் கலங்கிய கண்களுடனும் வீட்டுக்குள் வந்த சரவணனுக்கு எதிலுமே மனஞ் செல்லவில்லை. எஞ்சியிருந்த சிறுநிம்மதியும் அவனைவிட்டு அகன்றுவிட்டது. இதுகாலவரை படுக்கையிலாவது சிறுதுளி நிம்மதி பெற்ற அவனுக்கு இப்போது படுக்கை கூட முள்ளாக இருப்பது போன்ற பிரமை யேற்பட்டது; அதனுல் அவன் கால் போன திசையெல்லாம் நடந்து சென்ருன். ஆயின் இழந்த நிம்மதி மட்டும் அவனுக்குக் கிடைப்பதாக இல்லை. அதனுல் தனது அறைக்குட் சென்று ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டினுன்; அதிலே சில சிறந்த ஓவியங்கள் காணப்பட்டன. அதிலே மனதைப் பதிக்க முயற்சித்தான் அவற்றிலே காணப்பட்ட ஓவியங்களில் ஒன்று அவன் கவனத்தை ஈர்த்தது. அந்த ஓவியத்திற் காணப்பட்ட காட்சியை உற்றுப் பார்த்தான்.

அப்போது அங்கே வந்து கொண்டிருந்த பொன்னையாவிடம் அந்த ஓவியத்தைக் காட்டினுன். பொன்னையாவுக்குப் பெரும் ஆச்சரியமாக இருந்தது. சரவணன் மனம் மாறி விட்டானே என்று கூடச் சிந்தித்தார்: அல்லது தன்னிடம் ஓவியத்தைக் காட்டிக் கருத்துப் பரிமாறிக்கொள்ளும் அளவுக்கு அவனுக்கு என்ன வந்துவிட்டது. ஒருவேளை இவன் மனம் மாறும் விதமாகச் சிவகாமி ஏதாதவது கூறி அனுப்பியிருப்பாளோ...? என்னவாக இருக்கும் என்ற எண்ணத்தில் அவனிடம் இருந்த ஓவியத்தை வாங்கி அதிற்தன் விழிகளைப்பதித்தார். அதிலே கண்ட ஓவியம் அவரை அதிர்ச்சியடையச் செய்தது. எவ்வளவு தூரம் சரவணனின் மனம் புண்பட்டுப் போயுள்ளது என்பதை அந்த ஓவியம் உள்ளங்கை நெல்லிக் கனி போற் காட்டியது.

இந்த ஓவியத்தில் அப்படி என்னதான் விசித்திரமாக இருக்கிறது? என்று அவனைப் பார்த்து ஒன்றும் புரியாதவர்போற் கேட்டார் பொன்னையா: சரவணன் அவர் கேள்வியைக் கேட்டுச் சிரித்தான்.

அவன் கண்கள் மீண்டும் அந்த ஓவியத்தின் மீது பதிந்து கொண்டன; அதில் இருக்கும் புலியின் வாயில் அகப்பட்ட மானைப் பார்க்கும்போது எனக்கு சிவகாமியின் நினைவுதான் வருகிறது. அவளது வாழ்க்கையும் வெம்புலியின் வாயில் அகப்பட்ட மானின் கதைபோல ஆகிவிட்டது என்று கூறி அவரைப் பார்த்தான்.

அடர்ந்த காடொன்றில் வெம்புலியின் வாயில் அழகிய புள்ளி மான் ஒன்று அகப்பட்டுச் சித்திரவதைப் படுவதை ஒரு ஓவியர் தத்ரூபமாக விளக்கியிருந்தார். சரவணனின் கண்களுக்கு அந்தப் புலி முத்துக்குமரனைப் போலவும் புள்ளிமான் சிவகாமி போலவும் காட்சியளித்தனர். சிவகாமியின் வாழ்க்கை பாழாகிவிட்டது என நினைத்து நினைத்துப் புலம்பினுன் சரவணன், அவனுற் தன் துன்பத்தை ஆற்றவே முடியவில்லை: தன் துயரையெல்லாஞ் சேர்த்து கவிதையாகக்கிப் பாடுகிருன் அவன்.

தம்பெருமை தாமறியாத்
தஞ்சமிலாப் பெண்கடமை
வெம்புலிவாய் மானென்ன
வீணேகொடுத்திடுவார்
செம்பொனிலாவின்பஞ்
சிறந்ததெனக் கூறுதியால்
தெரிவையவட் கிம்மாற்றஞ்
சேர்க்கிளியே கூறுதியால்

---

## வாசகர் கருத்து

சுதந்திரன் ஆசிரியர்
அவர்கட்கு,

நான் ஓர் சுதந்திரன் பைத்தியக்காரன், 1947ம் ஆண்டு தொடக்கம் வட்டக்கொடை, தலவாக்கொல்லை, கழுத்துறை, கிளிநொச்சி, ஏருவூர் ஒட்டமாவடி, ஜாஎலை, முதலிய பல இடங்களிலும் எனது சொந்த ஊர் குரும்பசிட்டியிலும் அந்தந்த நேரத்தில் எங்கிருந்தாலும் சுதந்திரன் பேப்பரை தவருது வாசித்து வருவதுடன் அதனை பல பொதுமக்கள் வேலைசெய்யும் ஸ்தாபனங்களிலும் வாசித்து காட்டியும் எடுத்து வாசித்துவிட்டு மற்றையோருக்கு கொடுத்தும் வருவதையே தொழிலாக கொண்டுள்ளேன்.

சில சமயம் ஒரு பேப்பருக்காக ஒரு ரூபா கூட செலவழிப்பதுண்டு. சுதந்திரன் பார்க்காவிட்டால் எனக்கு பைத்தியமே பிடித்துவிடும், காலமெல்லாம், தமிழ், தமிழினம், தமிரசு, என முழக்கமிடும் சுதந்திரன் ஏடு, ஈழத் தமிழினத்தின் விடுதலையை, அதன் சுதந்திரத்தை, மனதார விசுவாசிக்கும் அத்தனை பேர் கரங்களிலும் தவழவேண்டியது.

பட்டம் பதவிக்காக பல்லை இழித்து திரியும் போலி வேஷதாரிகளின் செயல்களை உடனுக்குடன் கண்டிக்க, அவர்களின் கொட்டத்தை அடக்க, சுதந்திரன் என்றுமே பின் நிற்கக்கூடாது;

மேலும் தங்களை அரசாங்கம் கைது செய்தால் என்ன, விலைக்கு வாங்க நினைத்தால் என்ன, எமது தினபதி ஆசிரியர் அவர்களைப் போல் கூடுவிட்டு கூடு பாயாமல் என்றும் சுதந்திரமாக செயலாற்றி சுதந்திரன் ஆசிரியராக நீடூழிகாலம் வாழ்ந்து எமது இனத்திற்காக அருந்தொண்டு செய்வீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

இங்ஙனம்,
குரும்பசிட்டி கந்தையன்.

———

கோவை அண்ணா வாழ்க! வெல்க! கோவைத் தமிழ் மகனே! நீங்கள் பெறும் வெற்றி இந்த ஈழத் தமிழ் இனம் பெறும் வெற்றி அன்ருே! துணிவாக-தெளிவான கருத்துக்களை நினைப்பவர் பலர்! ஆனுல் அதை துணிவாக சொல்பவர் ஒரு சிலரே: அந்த வரிசையில் தமிழ் இனத்தின் சார்பில் எங்கள் கோவை அண்ணாவன்ருே முதல் வரிசையில் நிற்கிருர்:

தெள்ளு தமிழ் காக்க வந்தவனே! தூயவனே தமிழ் இனத்தின் தலைவிதியை தலைகீழாக மாற்றினுர், ஓர்நாள் பேரறிஞர் அண்ணா அவர்கள். அந்த தலைவிதி ஈழத் தமிழகத்தில் இருப்பதை அறிந்து அண்ணா வழியில் மாற்றியமைக்க வந்த தங்களை 'ஈழத்து அண்ணா' என்று ஒரு நாள் நம் தமிழ் இனம் வாழ்த்துப்பாடி வரவேற்கத் தான் போகிறது! வரத்தானே வேண்டும்.

தம்பி,
பெ: ஏ. ராமநாதன்,
இரத்தினபுரி.

———

ஐயா!

யு. என்: பி: அரசாங்கம் ஆட்சி நடத்தியபோது சில தமிழ்த் தினசரிகள் யு. என்: பி.க்குத் துதிபாடின; பின்பு ஐ: மு. அரசு பதவிக்கு வந்ததும் அப்பத்திரிகைகள் நீலம், சிவப்பு மைகளில் பிரசுரிக்கப் பட்டுவருகிறது. இவைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கும் அதே நேரத்தில் சிலர் 'சுதந்திரன்' பத்திரிகையின் தலையங்கம் சிவப்புமையால் பிரசுரிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டுகிருர்கள்: இதற்கான விளக்கம் கூற முடியவில்லை. சரியான விளக்கம் கூறி அவர்களுக்கு புரியவைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்:

சி. நடராசா.
மீசாலை வடக்கு.

[O தமிழரசுக் கட்சியின் மூவர்ணங்களில் ஒன்று சிவப்பு என்பதை மறந்திருக்கமாட்டீர்கள்; சுதந்திரன் தலையங்கம் வழமையாக சிவப்பு மையினுல் பிரசுரிக்கப்படுகிறதே தவிர [illegible] சோந்திபோல நிறத்தை மாற்றவில்லையே! மக்களைக் கவருவதற்காகவே சிவப்பு மையினுல் தலையங்கத்தை தீட்டுகிருேம்: —ஆர்']

## ஈழ தமிழகத்தின் தேசிய கீதம் எது?

2.2.71ஆம் நாள் வெளியான சுதந்திரனில் 'தேசிய கீதம் எது?' என்ற தலைப்புடன் வெளியான 'வாசகர் கருத்து'க் கண்டேன். இவ் வினு எழுவதற்கான காரணம் யாது என்பது புரியவில்லை.

ஈழத்தமிழகத்தின் தேசிய கீதம் கவிஞர் பரமகம்சதாசன் யாத்த "வாழ்க ஈழத் தமிழகம்!" என்ற பாடலே! ஈழத்தமிழினத்தின் விடுதலை இயக்கமான அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி 1958ஆம் ஆண்டு தேசிய கீதம் யாத்தளிப்பதற்கான போட்டியை நடாத்தியது: ஈழத்தின் முன்னணிக் கவிஞர்கள் பலர் இப்போட்டியிற் கலந்து கொண்டனர். முடிவில் கவிஞர் பரமகம்சதாசனின் பாடலே சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஈழத் தமிழகத்தின் தேசிய கீதமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. 1958இல் நிகழ்ந்த வவுனியா மகாநாட்டில் இப்பாடலுக்கான தங்கப்பதக்கப் பரிசும் வழங்கப்பட்டது. குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் அவர்கள் வெளியிட்ட அமரர் வன்னியசிங்கம் நினைவு மலர் (1960) என்ற வெளியீட்டில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது.

முற்போக்கு எழுத்தாளர்களின் 'புதுமை இலக்கியம்' 1962இல் மாநாட்டுச் சிறப்பிதழ் ஒன்று வெளியிட்டது. இச்சிறப்பிதழில் அ. ந. கந்தசாமி அவர்கள் ஈழத்துக்கவிஞர்களைப் பற்றிக் கட்டு[illegible] [illegible] இக்கட்டுரையில் பரமகம்[illegible]சன் பற்றிக் குறிப்பிடும்போது "தமிழரசின் தேசிய கீதம் பாடிய பரமகம்சதாசன்" என்றே குறிப்பிடுகிருர். அ. ந. க. பொதுவுடமையாளர் அவரே பரமகம்சதாசன் ஈழத்தமிழகத்தின் தேசியக் கவிஞர் என்பதை ஒப்புக்கொண்டு இலக்கிய வரலாறு எழுதிவிட்டபின் 'யார்?' என்ற பிரச்சினை இப்போது புதிதாக எழ இடமேயில்லை.

'வாழ்க ஈழத் தமிழகம்' என்ற தேசிய கீதம் வழக்கற்றுவிட்டதாகச் சொல்வது உண்மையாகாது. தமிழரசு மேடைகள் தோறும் இசை விருந்தளிக்கும் வீரத் தலைவி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் இத்தேசிய கீதம் பாடத் தவறுவதில்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை.

தமிழரசுக்கட்சி ஈழத்தில் தமிழ்த் தேசியத்தின் எழுச்சிமிக்க குரலாக ஒலித்துவருகிறது. இதன் பயனுகத் தமிழ்த் தேசியத்தின் எழுச்சிப் பாடல்கள் எண்ணிறந்தனவாக வெளிவருகின்றன. பரமகம்சதாசன், மகாகவி, நீலாவணன், முருகையன், காசி. ஆனந்தன், யாழ்ப்பாணன், வேந்தனுர், அம்பி, இளமுருகனுர், திமிலைத் துமிலன், விடிவெள்ளி, பாண்டியூரன், கதிரேசன், பஞ்சாட்சரம், நாகராசன் முதலிய முன்னணிக் கவிஞர் அனைவரும் தமிழரசின் தமிழ்த் தேசியத்தில் இரண்டறக் கலந்தவர்கள்: இவ்வடிப்படையில் நோக்கும்போது இரண்டு என்ன, ஈராயிரம் தேசிய கீதங்கள் தோன்றும். அவை ஈழத் தமிழனின் இன எழுச்சியைத் தூண்டி இன விடுதலைக்கு வழிவகுக்கும். இவ்வுண்மைக்கு 'அறப்போர் அணி'யாரின் 'எங்கள் ஈழத் தமிழ் நாடு' சிறந்த சான்ருகும். எனினும் "வாழ்க ஈழத் தமிழகம்" என்பதே எமது தேசிய கீதம். இதனை மாற்றுவதோ, இல்லையென மறுப்பதோ ஈழத் தமிழ்த் தேசியத்தை இழிவுபடுத்துவதாகும்.

பொங்கல் இதழில் குயுக்தியார் தேசிய கீதம் பற்றிக் குறிப்பிட்டது வரலாற்று வழிப்பட்ட உ[illegible]மையாகும், கூட்டாட்சிக்கு[illegible]பட்ட தன்னுட்சித் [illegible] [illegible]றும்

(10-ம் [illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தேசாபிமானியின்' புரட்டலுக்கு திருமலை நிருபர் தரும் சூடான பதில்!

'சுதந்திரன் சுத்தஅபத்தம் திருமலையில் நடந்ததென்ன' என்பது போன்ற தலைப்புக்களுடன் 23-2-71 'தேசாபிமானி' எனப்படும் கம்யூனிச முட்டையில், ஆச்சரியமான அப்பட்டமான பொய் கலக்கப்பட்ட—செய்திக் கடிதம் ஒன்று வெளியாகியுள்ளது. 'சுதந்திரன்' இதழின் கண்ணியமான பத்திரிகா தர்மத்துக்கு முன்னால் காலிக் கும்பலின் கூச்சல் கருத்தற்றதெனினும், திருமலை வாலிபர்களின் கொள்கை பற்றி அவர்களால் அவிழ்க்கப்படும் புழுகு மூட்டைகளைத் தகர்த்தெறியு முகமாக—'சுதந்திரன்' இதழின் நிருபர்கள் எச் சூழ்நிலையிலும் கற்பனைச் செய்தி கொடுக்கும் பண்பினையுடையவர்களல்லர் என்பதற்காக — இக்கட்டுரையை இங்கு எழுதுகிறேன்.

திருமலை வாலிபர் சங்கக் காரியதரிசி என விளம்பரப் படுத்தப்பட்ட வி. தேவதாஸ் என்பவர் எழுதியுள்ள மேற்படி கடிதத்தில் உள்ள கருத்து சுதந்திரன் செய்தி பொய்யானது என நிரூபிக்க முயன்று சொல்லுக்குச் சொல் தானே தோல்வியைத் தழுவியுள்ளார்.

இது எவ்வாறெனின்;

கம்யூனிச இயக்கம் திருமலையில் தீவிரமாக வளர்வது தடுக்க முடியாததெனவும் தோ(ல)ழர்கள் வைத்திலிங்கம் விஜயானந்தன் ஆகியோர் மூன்றுநாட்கள் துணிவுடன் தங்கிநின்று அரசியல் வகுப்பு எத்தனை 'வீரர்'களுடன் நடந்தது என்பதை துணிவாக விளக்கவோ, அல்லது அவர்களின் 'இசத்'தைத் தழுவும் வாலிபர்கள் எண்ணிக்கை நூற்றைம்பதைத் தானும் விஞ்சியது என நிரூபிக்கவோ முடியுமா? அது மட்டுமன்றி, இவர்களது வகுப்புக்களில் கலந்து கொண்டவர்களில் அநேகமானோர் தேர்தலில் இவர்களின் எதிரியான—முதலாளித்துவக் கட்சியான ஐ. தே. க. வுக்கு வால் பிடித்வர்கள் என்பதையோ, 'நான் ஒரு கம்யூனிஸ்டு' என்று சொல்லக் கூடிய திராணி அற்றவர்கள் என்பதையோ மறுக்க முடியுமா?

தமிழரசு வாலிபர்களின் கேள்விகட்குத் தரமான பதில் கொடுத்தாரம் வ. பொ. என வாயடிக்கிறார் இந்தக் குஞ்சு. 24-2-71 சுதந்திரன் இதழில் வெளியான செய்தியில் வ. பொ. வின் பதில்கள் தரமான பதில்கள் தாமா? அல்லது மேற்படி செய்தி பொய்யானது என்றுவது நிரூபித்து விட முடியுமா? பொருளாதாரப் பிரச்சினை தீரின் இனப் பிரச்சினை தீருமென கேள்வியொன்றுக்கு திருவள்ளுவர் கழகத்தில் வைத்து வ. பொ. இறுத்த பதில் தரமானதுதானா? பதிலின் பொருளை உம்மால் தெளிவாக விளக்கி பதில் தரமானது தான் என உறுதிப் படுத்த முடியுமா?

வ. பொ. கூட்டத்தின் ஆரம்பத்திலே பேசியதற்கு காரணம் கற்பிக்க முயன்று கரணமடிக்கிறார் காரியதரிசி தேவதாஸ்... 8ம் திகதி மாத்திரம் திருகோணமலைக்கு வரமுடியுமென்றும் 9ந் திகதி காலையே தான் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பி விடவேண்டுமென்றும் அறிவித்திருந்தார்' என எழுதப்பட்டுள்ள செய்திக் கடிதத்தின் பிறிதோர் இடத்தில்... தான் அடுத்த நாள் காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நிற்க வேண்டி இருப்பதால் தான் முதலே சொற்பெருக்காற்ற வேண்டியதைப் பகிரங்கமாகவே அறிவித்தார்...' எனவும் முரணான இரு வாக்கியங்கள் வந்துள்ளன. முதலாவது வசனம் 9ந் திகதி காலை தான் யாழ்ப்பாணம் திரும்புவதாக உரைக்கிறது. ஆனால் இரண்டாவது வாக்கியம் 9ந் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நிற்க வேண்டுமென உரைக்கிறது.

ஆமாம்; முதலாவது... திருமலையில் தமக்கு நல்ல வரவேற்பிருக்கும் என்ற எண்ணத்தில் விபரமறியாமல் வ. பொ. அறிவித்திருந்தது! இரண்டாவது, திருமலை வாலிபர்களின் ஆவேசத்தைக் கண்டு ஆள் தப்பினால் போதுமென உடனே ஓடி விடும் தீர்மானத்துடன் வ. பொ. கூட்டத்தில் உரைத்தது! திருமலை வாலிபர்களைக் கண்டு வ. பொ. எவ்வளவு தூரம் தன்னை அழைத்தவர்களால் கூடத் தன்னைக் காப்பாற்ற முடியாதென உணர்ந்து—வெகுண்டோடினார் தான் என்பதை எவ்வளவு நாசூக்காக—உண்மையை—வெளிப்படுத்தியிருக்கிறார் இந்தக் குஞ்சு! அது மட்டுமல்ல பத்து மணிவரையிலுமே நடந்த கூட்டத்தில் கடைசியில் உரையாற்றினால்—காரில் யாழ்ப்பாணம் செல்லவிருக்கும் வ. பொ. வினால்—அடுத்த நாட் காலை ஒன்பது மணிக்கு யாழ் நகரில் நிற்க முடியாதெனப்படும் கூற்று எவ்வளவு கேலிக்கிடமானது யாழ் நகருக்குக் கார்ப் பயணம் ஐந்து மணித்தியாலத்துக்கும் அதிகமாகவா போய் விடப் போகிறது?

வாலிபர்களின் உணர்ச்சிக் கொந்தளிப்புக்குப் பயந்து ஓடவில்லையாம் வ. பொ. அவர் உடனே ஓடியதன் காரணம்... கார்திருப்தியற்ற நிலையாம்; திருப்தியற்ற வாகனயானால் இவர்களின் சித்தாந்தம் 'திருத்துதற்கு முயற்சி எடுக்காதே திடீ

**க. கோணேஸ்வரன்**
**(சுதந்திரன் திருமலை நிருபர்)**

ரென்று ஏறி ஓடு' என்பது தானோ யாரறிவார்? யாருக்கு பூச்சாண்டி காட்டுகிறார்கள் இவர்கள்?

மொழி இனப் பற்றுக்கள் இல்லாத எங்களுக்கு மொழி அறிவு எப்படி வரும்?' என மார் தட்டிக் கேட்கும் கருத்தொன்றை வலியுறுத்தியுள்ளார் அந்தக் கடிதக் குஞ்சு! 'சுதந்திரன் கூறுவது போல்' மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல' என்பதல்ல தலைப்பு என்று வாதிக்கும் மாகா வீரரே சுதந்திரன் செய்தி உமக்கு நன்றாக விளங்கியுள்ளதா? அப்படியான தலைப்பை யார் உமக்குச் சொன்னார்கள்? இன்னொரு தடவை எமது இதழைப்பாரும். '...விழாக் குழுவினரால் அவருக்கு வழங்கப்பட்ட தலைப்பு மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல, அத்தலைப்பில் பேசினால் அடிவாங்க வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைந்திருந்தது... என்ற செய்தியின் பொருள் புரியாவிட்டால் தமிழ் ஆசிரியர் எவரிடமாயினும், தமிழ்ப் படிக்கும் குழந்தையிடமாவது கேட்பதுதானே! அதற்காக வெட்கப்பட்டு ஊரைக் குழப்ப முற்பட்டு ஊமையாகலாமா?

அடுத்து தமிழ் அரசியல் வாதிகளின் பாதை மலடு குருடு என்று வசை பொழிகிறீரே, யார் மலடு யார் குருடு என்று நீரே திகைக்கலாமா? தமிழ் அரசியல் வாதிகளான எங்கள் கட்சியினர் பெற்றெடுத்த தமிழர்களின் உரிமை என்ற சாதனைக் குழந்தைகள் எத்தனையென்பதை ஒரு தமிழ்ச் சிறுவனைக் கொண்டு சொல்ல வைக்க முடியும் எம்மால்? அதை மறைத்து, உங்கள் 'மலடு' இன்றிப் பெற்றெடுத்தவற்றை சொல்ல உங்கள் வ. பொ. வினாலேனும் முடியுமா? என்னையா முழிக்கிறீரா? உடனே கடிதம் போடும் வ. பொ. வுக்கு;

நாங்கள் அழைத்தோம் வ. பொ. வை என்று கூறும் நீர் கம்யூனிஸ்டு குஞ்சுகளின் கூடுதான் இலக்கிய வட்டங்கள் என்பதை இப்படியா வெளிப்படுத்துவது? ஐயோ பாவம்! அதனால் தானோ என்னவோ, தங்கள் குருநாதருக்கு—மாஸ்கோ வீரருக்கு—ஏற்பட்ட மானக்கேட்டை எண்ணி—கூட்டம் கொந்தளித்து விழுந்ததை எண்ணி தெருவில் கூட காண முடியாத அளவுக்கு ஒளித்து விட்டார்கள் விழா வினர்கள்.

இறுதியாகக் கேட்கிறேன்! சுதந்திரன் செய்தியில் பொய்யுண்டு என்பதை உம்மாலோ, உமது கடிதத்தை வெளியிட்ட தேசாபிமானியாலோ நிரூபிக்க முடியுமா? உங்கள் 'இசம்' எங்கள் நகரில் வளர்ந்து வருவதாக வாயடித்த உம்மைப் பார்த்துக் கேட்கிறேன்; உம்மாலோ, மாஸ்கோ வீரராலோ திருமலையில் மீண்டுமொரு கூட்டம் வைத்து பொது மக்களை வசீகரிக்க முடியுமா?

வக்காலத்து வாங்கிய வால்தாஸே, இவை சாதாரண கேள்வியல்ல; எனது சவால்! துணிவிருந்தால் ஏற்றுப்பாருங்கள்!

---

# தமிழுணர்ச்சி இங்கு பரவாமல் தடுப்பதற்கா தி.மு.க. ஏடுகளுக்குத் தடைவிதிக்கிறீர்கள்?

## நாடாளுமன்றத்தில் இரத்தினம் பேச்சு!

திரைப்படத் தொழிலில் மும்முரமாக இறங்குவதற்காக அரசாங்கம் இந்த சட்ட மூலத்தைக் கொண்டு வந்திருக்கின்றது. திரைப்படத் தொழில் ஒரு வியாபாரத் தொழில் மட்டுமல்ல அது ஒரு கலைத்தொழிலுங்கூட; அதோடு பிரசாரத்திற்கும் அது கைவந்த தொழிலாகும். வியாபாரத் தொழில் என்ற முறையில் அதில் வருகின்ற நட்ட நயம் எப்படி இருந்தாலும் அது மக்களின் வாழ்வை அதிகம் பாதிக்காது. ஆனால் கலை என்ற முறையிலே, நல்ல பொழுது போக்கு என்ற முறையிலே, திரைப்படத் தொழிலைச் செம்மையாகச் செய்யாது விட்டால்பல விளைவுகள் ஏற்படும். கட்சிக்காழ்ப்புஉள்ளவர்கள், கட்சிக் கண்ணோட்டத்தோடோ அரசியல் கொள்கைக் கண்ணோட்டத்தோடோ உள்ளவர்கள், இந்தத் திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கு நியமிக்கப் படும்போது அல்லது அப்படி நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் தங்களுக்கு என்று பல்வேறு கொள்கைகளை உடையவர்களோஇருந்தால் இந்த திரைப்படக் கூட்டுத்தாபனம் நல்ல முறையில் தொழிற்படாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

### மக்கள் கருத்தை மதிக்கவேண்டும்

ஏனெனில், கலையிற்கூடப் பலவகையான இரசனைகளிருக்கின்றன. பலவகையான சுவைகள் இருக்கின்றன. எனக்குத் தெரியும்—இங்கு இருக்கின்ற சிங்கள உறுப்பினர்களும் எனது கூற்றை ஏற்றுக்கொள்வார்கள். சில சிங்களவர்களும் தமிழர்களும் சிங்களத். தமிழ்ப் படங்களைப் பார்க்க விருப்பம் கொள்வதில்லை. ஆங்கிலப்படங்களைத்தான் பார்க்க வேண்டுமென்று அவர்கள் சொல்வார்கள். சில தமிழர்கள் சில தமிழ்ப் படங்களைப் பார்ப்பார்கள். சில தமிழ்ப் படங்களைப் பார்க்கமாட்டார்கள். எனவே சுவை வெவ்வேறு வகையாக இருக்கின்றது. இந்தச் சுவைகளை ஓரளவு மட்டிட்டு அறிந்து படங்களைத் தயாரிக்க வேண்டும். எந்தெந்த விதமான சுவைக்கு எந்தெந்த விதமானகரு, பின்னணி தேவை என்பதை அறிய வேண்டும். எந்தெந்தவிதமான படங்களை எடுத்தால் அவற்றை மக்கள் பார்ப்பார்கள், அவர்களுடைய சுவை உணர்ச்சிக்கு விருந்தாக இருக்கும் என்பதை அறிந்து படங்களை எடுக்க வேண்டும். பலர் இன்று, தோல்வியைக் கண்டு அறிந்த அனுபவத்துடன் படங்களைத் தயாரிக்கிறார்கள்.

புதிதாக இத்துறையில் இறங்கும் அரசாங்கம் மக்கள் சுவைக்கு ஏற்பப் படங்களைத் தயாரித்தால்தான் அவை வருவாயைக் கொடுக்கும் அதனுடன் மக்களும் பயன் அடையக்கூடியதாக இருக்கும். எனவே மக்களுடைய கருத்தை அறிந்து படங்களைத் தயாரிக்கத்தக்க அதிகாரிகளையும் ஊழியர்களையும் நியமிப்பது மிக இன்றியமையாதது.

திரைப்படங்கள் பிரசாரத்துக்கும் மிகப் பயன்படத்தக்த ஒரு கருவியாகும். எப்படி நாடகங்கள் மக்களுடைய விடுதலை உணர்ச்சியைத் தூண்டி, அடிமைப் பட்டுக் கிடந்த பல நாடுகளை விடுதலை பெறச் செய்த [illegible] இன்று திரைப்படங்களும் மிகச் சிறந்த பிரசாரக் கருவியாக ஆக்கப்பட்டிருக்கின்றன. மக்களுடைய சிந்தனைக்கு விருந்தளித்து அவர்களுக்கு நல்ல வழியைக் காட்டுவதுமல்லாமல் ஒவ்வொருவருடைய கருத்தையும் கொள்கைகளையும் பரப்புவதற்குக் கூட திரைப்படங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஒரு சிறுபான்மை இனத்தவர் என்ற முறையிலே, உரிமைகளைப் பெற முடியாமல் இன்னும் போராடிக் கொண்டிருக்கிறவர்கள் என்ற முறையிலே, தமிழ் மக்கள் இந்தச் சட்டத்திலே சந்தேகம் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஏனென்றால், சென்ற அரசாங்க காலத்திலே "வானொலி நிலையம் செம்மையாகக் கடமையாற்றவில்லை; அரசாங்கச் சார்பாகத்தான் பிரசாரம் செய்தது" என்று முன்பிருந்த எதிர்க்கட்சியினர் சொன்னார்கள்.

### தமிழர் உணர்ச்சியை தடுக்கும் முயற்சி!

இப்பொழுதுள்ள அரசாங்கம் வானொலியை தங்களுடைய கொள்கைகளைப் பரப்ப பயன்படுத்துகிறது என இப்பொழுது எதிர்க் கட்சியிலே இருக்கும் நாங்கள் சொல்லுகிறோம். வானொலியை அரசாங்கம் தனது கொள்கைகளை பரப்ப பயன் படுத்த முனைவது இயற்கைதான். வானொலியைப் பயன்படுத்திய வரலாற்றைப் பின்னணியிலே திரைப்படங்களையும் தங்களுடைய கொள்கைகளைப் பரப்ப, தங்களுக்கு மாறான கட்சிகளுக்கு மாறாகப் பயன்படுத்த, தங்களுடைய கொள்கைகளுக்கு மாறான கட்சிகளுடைய கொள்கைகளைப் பரப்பப் பயன்படுத்தாமல் அப்படிப்பட்ட கொள்கைகளையுடைய படங்களையெல்லாம் எடுக்காமல் அவற்றையெல்லாம் ஒதுக்கத்தக்கனவாக ஆக்கினால் அது ஒரு பெரிய ஆபத்தான சூழ்நிலையை உருவாக்கும் என்று கூற விரும்புகிறேன்.

உதாரணத்துக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன். இந்தியாவிலிருந்து திரைப்படங்களை இறக்குமதி செய்ய வேண்டாம் என்று ஒரு குரல் எழுந்தது, பத்திரிகைகளைத் தடுக்க வேண்டும் என்ற குரல் எழுந்தது போல் வானொலி நிலையத்திற் பணிப்பாளராகக் கடமையாற்றும் ஒருவர்தான் இதற்குக் காரணமாக இருந்தார். தென்னிந்தியாவிலிருந்து வரும் ஆபாசப் பத்திரிகைகளையெல்லாம் தடை செய்ய வேண்டும் என்ற ஓர் ஆரவாரம் இருந்தது. ஆனால் தமிழ் மக்களுடைய பெரும எதிர்ப்பால் அது இன்னமும் கைகூடவில்லை. அதன் பின்னணியிலுள்ள உண்மை என்ன தெரியுமா? அந்த உண்மையை இந்தச் சபையிலே தெரிவிக்க விரும்புகிறேன்: அங்கேயிருந்து வரும் திராவிட முன்னேற்றக் கழகப் பத்திரிகைகள் இங்குள்ள தமிழ் மக்களுக்கு சில உணர்ச்சிகளை உண்டாக்குகின்றன. அதற்காகத்தான் அதை தடைபடுத்த முயற்சிக்கிறார்கள்.

இந்த நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் என்றால் பயப்படுகிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அண்மையிலே, அமைச்சரவையில் ஒரு பிரதிநிதியாக இருக்கும் தபால் தந்தித் தொடர்பு அமைச்சர் யாழ்ப்பாணம் சென்றிருந்த பொழுது அறிஞர் அண்ணா என்று தமிழ் நாடு மாத்திரமல்ல, உலகம் முழுவதுமே போற்றும் அண்ணா அவர்களைப் பாராட்டி அவர் தமிழர்களுக்கென தமிழ் நாட்டை உருவாக்கிக் கொடுத்தவர் எனப் பகிரங்க

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலப்பில் இன்பம் காணும் குமாரசூரியருக்கு

## இதோ ஒரு கதை!

எமது தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரையும் அவர் சில சமயங்களில் வெளியிடும் அறிவுரைகளையும், பின்னர் அதனால் அவரே அவதிப்படுவதையும் எண்ணும்போது பண்டைக் கிரேக்க நாட்டின் 'ஓவியன் — சக்கிலியன்' பற்றிய ஒரு கதைதான் நினைவுக்கு வருகிறது.

அக்கதையினை நாவலர் இரா நெடுஞ்செழியன் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் தான் எழுதிய ஒரு கட்டுரையின் முற்பகுதியில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

''பண்டைக் கிரேக்க நாட்டில் ஓர் ஓவிய வல்லுனன் வாழ்ந்து வந்தான். அவனது படைப்புகள் அனைத்தும் உயிர் ஓவியங்கள் எனக் கற்றோராலும் மற்றோராலும் நன்கு மதிக்கப்பட்டன. அவன் தான் தீட்டும் ஒவ்வொரு ஓவியமும் தன்னுடைய மனதிற்கு மட்டும் உகந்ததாக இருந்தால் போதாது, பொது மக்களின் மனதிற்கும் உகந்ததாக இருக்கவேண்டும் என்று கருதினான். பொது மக்களின் சீரிய மதிப்பீட்டை பெற்றால் தான், ஓவியம் சிறந்த ஒன்றாக மதிப்பதற்குத் தகுதி படைத்ததாகும் என்று எண்ணினான். பொது மக்களின் மதிப்பீட்டை அறிவதற்காக அவன் தான் வரையும் ஒவ்வொரு ஓவியத்தையும், தன் வீட்டிற்கு வெளிப்புறத்தில், பொது மக்களின் பார்வையில் படும்படியாக வைத்து விடுவான். போவோர் வருவோர் ஓவியத்தைப் பார்த்து விட்டு என்ன கூறுகிறார்கள் என்பதைக் கேட்டறியும் பொருட்டு ஒரு பக்கத்தில் ஒளிந்து கொள்வான். பார்ப்பவர்கள் ஓவியத்தைப் பாராட்டினால் அதற்காக அகமகிழ்வான், உண்மையான குற்றங்குறைகளைக் கூறினால், அவற்றைக் குறித்துக் கொண்டு பிறகு அந்த ஓவியத்திலிருந்து அந்தக் குற்றங்குறைகளைப் போக்க முயலுவான்.

ஒரு நாள், அந்த ஓவியன், ஒரு வீரனின் ஓவியத்தை வரைந்து, அதனை வீட்டிற்கு வெளிப்பக்கத்தில் வைத்து விட்டு, அந்தப் படத்திற்குப் பின்புறத்தில் ஒளிந்து கொண்டிருந்தான். அந்தப் பக்கமாகச் செருப்பு தைக்கும் சக்கிலியன் ஒருவன் வந்தான். அவன் ஓவியத்தின் முன்னால் நின்று ஓவியத்தை உற்றுக் கவனித்தான். ஓவியத்தில் வரைந்திருந்த வீரனின் காலில் அணிந்திருந்த காலணி, சரியாக வரையப்படாமல் இருந்ததை உணர்ந்தான். காலணியின் அமைப்பு இப்படி இருக்கக்கூடாது. அப்படி இருக்க வேண்டும் என்று திருத்தம் ஒன்றைக் கூறினான். அதனைக் கேட்டுக் கொண்டிருந்த ஓவிய வல்லுநன் வெளியே வந்து படத்தை உற்றுப் பார்த்தான். சக்கிலியன் சொல்லுவது சரிதான் என்றும், தான் வரைந்தது தவறுதான் என்றும் உணர்ந்து, அந்தத் திருத்தத்தைச் செய்து விட்டு, அரிய பரிந்துரையை வழங்கிய சக்கிலியனை மிகவும் பாராட்டினான். சக்கிலியனும் தனக்குப் பாராட்டுதல் கிடைக்கப் பெற்றதே என்ற மனமகிழ்ச்சியுடன் அகன்றான்.

மற்றொரு நாள், அந்த ஓவிய வல்லுநன் ஒரு பெண்ணின் படத்தை வரைந்து, போவோர் வருவோர் பார்வைக்கு எதிரில் வழக்கம் போல் வைத்திருந்தான். அன்றும் அந்தச் சக்கிலியன் அந்தப் பக்கம் வந்தான். படத்தை உற்றுப் பார்த்தான்: ஏதேனும் குற்றங்குறை கண்டு பிடித்துச் சொல்லலாம் என்ற உணர்வோடு படத்தை மேலிருந்து கீழ்வரை பல தடவைகள் உற்று நோக்கினான். இறுதியாகப் படத்தில் வரையப்பட்டுள்ள பெண்ணின் கழுத்தில் காணப்படும் அணி இப்படி இருக்கக்கூடாது. அப்படி இருக்கவேண்டும் என்று கூறினான். உடனே ஓவியவல்லுநன் வெளியே வந்து பார்த்தான். கழுத்தணி வரையப்பட வேண்டிய முறையில் தான் வரையப்பட்டிருந்தது. பக்கத்தில் நின்றுகொண்டிருந்த சக்கிலியனைப் பார்த்து, ''உன்னுடைய சிந்தனையை செருப்பளவோடு நிறுத்திக்கொள், கழுத்தணி அளவுக்கு அதனைக் கொண்டு வராதே! செருப்பைப் பற்றிக் கூற உனக்குத் தகுதியிருக்கிறது; நீ கூறிய திருத்தம் தேவையும் பட்டது; எனவே உன்னை நான் பாராட்டினேன்! ஆனால் கழுத்தணி பற்றிக் கூற உனக்குத் தகுதியில்லை; நீ கூறிய திருத்தம் தேவைப்படவுமில்லை; எனவே உன்னை நான் பழிப்பதைத் தவிர பாராட்டுவதற்கில்லை!'' என்று கூறினான். சக்கிலியன் வெட்கத்தோடு அப்புறம் அகன்றான்''

இக்கதையினை உவமையாகக் கொண்டு அப்பொழுது உள்துறை அமைச்சராக இருந்த திரு பக்தவத்சலனார் தமிழில் அர்ச்சனை செய்வதைக் கண்டித்ததைச் சாடி நெடுஞ்செழியன் அவர்கள் 'செவியிற்சுவை உணரா அமைச்சர்' என ஓர் அருமையான கட்டுரையை எழுதினார். அவர் உவமைக்காக கையாண்ட மேற்படி கதையும், நாவலரது கட்டுரையின் சில பகுதிகளும் அமைச்சர் குமாரசூரியருக்கும் மிகமிகப் பொருந்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் குமாரசூரியருடைய அறிவையோ ஆற்றலையோ நாம் குறைத்து மதிப்பிடவில்லை. அவர் ஒரு சிறந்த கட்டடக் கலைஞர் என்பதில் எமக்கு ஐயப்பாடு கிடையாது. தபால் தந்தித் துறை குறித்தும் அவருக்குத் தரமான அறிவு இருக்கலாம் என்பதில் எமக்கு மாறுபட்ட கருத்துக் கிடையாது. எமது போதாத காலத்துக்கு அவர் ஓர் அரசியல் வாதியாக இருப்பதையும் நாம் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் இதற்கு மாறாக அவரை நாம் ஒரு வரலாற்று அறிஞரென்றோ, தமிழ்ப் பண்பாட்டின் காவலர் என்றோ, தமிழறிஞர் என்றோ மறந்தும் கூட ஒப்புக்கொள்ள மாட்டோம். இவைகள் குறித்து அவர் அறிவுரைகள் கூறுவதையும் நாம் விரும்பமாட்டோம்; ஈழத் தமிழகமும் விரும்பவில்லை.

அமைச்சர் அவர்கள் பண்டாரநாயக்கா நினைவு மண்டபம் 'இப்படித்தான் அமைய வேண்டும்' என்று ஏதாவது அறிவுரை கூறினால் அதில் நாம் தவறுகாண முற்படமாட்டோம்.

அவர் தபால் தந்தி இலாகாவில் நிலவும் தந்திகளைத் தபாலில் அனுப்புவது போன்ற ஊழல்களை ஒழிப்பதற்கு ஏதாவது வழிவகைகள் சொன்னால், அவைகளையும் நாம் மனநிறைவோடு ஏற்றுக்கொள்வோம்.

ஆனால் அவரோ இதையெல்லாம் விட்டுவிட்டு தமிழனுடைய வரலாறு, பண்பாடு, தமிழிலக்கியம் குறித்தெல்லாம் தப்பும் தவறுமான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்; அதனால் மேலேயுள்ள கதையில் வரும் சக்கிலியன் இறுதியில் எப்படி இறங்கத்தக்க நிலைக்கு ஆளானானோ அப்படி அமைச்சரும் அடிக்கடி ஆளாகி வருகிறார்.

திரு. குமாரசூரியர் தான் அமைச்சரான புதிதில் கொழும்பில் ஒரு கூட்டத்தில்

### போனாச்சானா

''இலங்கையில் தமிழினம் என்று ஓர் இனம் இல்லை. அது வெறும் கலப்புச்சாதி என்று தனது தகுதிக்கு மீறிய வரலாற்றுத் துறையில் புகுந்து கருத்து வெளியிட்டார்.

இதற்குத் தமிழினம் கொதித்தெழுந்து எதிர்ப்புத் தெரிவித்ததும் பல மாதங்களின் பின்னர் அவர்தான், அப்படிப் பேசவில்லை என்று பணிந்து வந்து மறுப்புத் தெரிவித்தார்.

இதன் பின்னர் சென்ற ஆண்டுக் கடைசியில் யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டத்தில் சிங்களவர் தமிழர் கலப்புத் திருமணம் நடைபெறவேண்டும்'' என்று தனது தகுதிக்கு மீறிய பண்பாட்டுத் துறையில் புகுந்து அமைச்சர் அறிவுரை வழங்கினார்.

அமைச்சர் 'இலங்கையில் தமிழினம் என்று ஓர் இனம் இருக்கிறது. அது கலப்புச் சாதியல்ல' என்ற உண்மை புரிந்ததும் 'அப்படி இருக்கக் கூடாது. அது கலப்புச் சாதியாக வேண்டும்' என்று விரும்பித்தான் அப்படிச் சொன்னாரோ என்னவோ தெரியவில்லை.

அமைச்சரின் கலப்புத் திருமண வேண்டுகோளுக்கும் தமிழர்களிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பவே அதையும், அப்படித் தான் சொல்லவில்லை என மறுத்தார்.

கடைசியாக சென்றமாதம் கொழும்பில் அனைத்துலக தமிழாராய்ச்சிக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற தமிழ் நூற் காட்சித் தொடக்க வுரையிலும் அமைச்சர் இன்னொரு 'கலப்பு' எண்ணத்தை வெளியிட்டார்.

'இலங்கையில் வாழும் வேறுபட்ட இனங்களது கலைகள் ஒன்றோடொன்று உராயும்போது உண்டாகும் சலனங்களும் ஒளிகளும் அதிசயமான இலக்கியப் படைப்புகளை வருங்காலத்தில் உண்டாக்கும்'' என்பது அவரது அருமையான கண்டுபிடிப்பு!

இவ்வாறு தனது தகுதிக்கு மீறிய தமிழிலக்கியத் துறையில் புகுந்து அமைச்சர் ஒரு கருத்து வெளியிட்டதற்கு நமது தமிழ் எழுத்தாளர்கள் இதுவரை எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை; அவர்கள் [illegible] கவனத்தைச் செலுத்திக்கொண்டிருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. அதனால் அமைச்சரும் வழக்கம்போல் தனது மறுப்பை வெளியிடுவதற்கு இன்னும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

இரு வேறு கலைகள் ஒன்றுக்கொன்று வளர்ச்சிக்காகத் துணைபுரியலாம்- உதவலாம்; அதில தவறில்லை. ஆனால் அவை ஒன்றோடொன்று உராய்ந்து தமது தனித்தன்மையை இழந்துவிடக் கூடாது. இதுவே உண்மையான இலக்கிய வளர்ச்சியில் அக்கறை உள்ளவர்களது கருத்தாக இருக்கும்.

ஆங்கில வடமொழிகள் தமிழோடு உராய்ந்ததால் தமிழுக்கு ஏற்பட்ட கறை இன்னும் மறையவில்லை. எத்தனையோ ஆங்கில வடமொழிச் சொற்கள் தமிழில் கலந்து தனித்து இயங்கவல்ல தமிழை மாசுபடுத்தியது. இந்த இழிவைத் துடைத்துத் தமிழுக்கு ஏற்றம் கொடுத்திட மறைந்த மறைமலை அடிகளார் தொடக்கம் ஈழத்து ஈழவேந்தன்வரை உழைத்து வருவதெல்லாம் குமாரசூரியருக்குத் தெரிய நியாயமில்லை.

இப்பொழுது ஈழத்தில் நாம் விரும்பாமலேயே சிங்கள மொழி எமது மொழியோடு உராய்ந்து லக்சலா, சலுசலா, சாதிக சம்பத, மகாசன சம்பத, போயா போன்ற பல இழிசொற்களை தமிழுக்குக் கொட்டிவிட்டிருக்கிறது. தனித்து இயங்கவல்ல தமிழில் இவையெல்லாம் தமிழ்போல் வழங்கி வருகிறது.

இந்த அவமானத்தைத் துடைத்திட ஒரு வழிசொல்லத் துணிவற்ற அமைச்சர் குமாரசூரியர் தமிழின் உராய்வுக்கு வழி காட்டியிருக்கிறார். அதுவும் தமிழ் எழுத்தின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கின்ற — எழுத்தாளர்கள் கூடியுள்ள ஒரு விழாவில்! இதுதான் தபால் அமைச்சர் தமிழ் வளர்க்கும் இலட்சணமா?

யாழ்தேவியை உத்தரதேவியுடன் உராயவிட்டு அதனால் உண்டாகும் சலனங்களையும் ஒளிகளையும் வேடிக்கை பார்ப்பதற்கும் குமாரசூரியரின் கலைகளை உராயவிடும் அறிவுரைக்கும் எதுவித வேறுபாடும் இருப்பதாகத் தெரியவில்லை.

யாகாவா ராயினும் நாகாக்கவேண்டும். அதுவும் அவர் அடிக்கடி வெளியிடும் 'கலப்பு' எண்ணங்களையிட்டு மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இல்லையேல் அவர் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு!

அமைச்சர் கட்டடக் கலை குறித்தோ, தபால் தந்தி துறை குறித்தோ கருத்துக்கள் வெளியிட்டுக் கொண்டிருப்பாரேயானால் அக்கருத்துக்கள் சரியோ தவறோ அது குறித்து கருத்துக்கள் வெளியிட அவர் தகுதிபடைத்தவர் என்றாவது ஒப்புக்கொள்ளலாம். ஆனால் அவரோ தனக்குத் தகுதியில்லாத — பொருத்தமில்லாத — பழக்கமில்லாத துறைகளில் எல்லாம் புகுந்து ஏதேதோ உளறிக்கொட்டிக்கொண்டிருப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது. அதனால் பின்னர் அவரது அறியாமை வெட்டவெளிச்சமாகி வருவதை எண்ணும்போது வேதனையாகவும் இருக்கிறது.

சக்கிலியன் எப்படி செருப்பளவோடு தன் அறிவை வைத்துக்கொண்டிருக்காமல், கழுத்தணி அளவுக்கு நீட்டிப் பார்க்க முயன்று எக்கொலி கொட்டி நகைக்கப்படுவதற்கு ஆளானானோ அப்படியே அமைச்சர் குமாரசூரியரும் கட்டடக்கலை. தபால் தந்தித்துறை — அளவோடு தம் அறிவை நிறுத்திக்கொள்ளாமல் வரலாறு, பண்பாடு, தமிழிலக்கியம் பற்றியெல்லாம் தம் குறை அறிவை நீட்டிப் பார்த்து, இடர்ப்பட்டு தமிழறிஞர் பெருமக்களால் எள்ளி நகைக்கப்படுகிற அளவிற்கு ஆளாகிவருகிறார்.

## தினகரனுக்குத் தீ

வேலணைக் கிராம சபையில் தமிழ்ப் புறக்கணிப்புக் கண்காட்சி நடைபெற்றதை நல்லோர் யாவரும் பாராட்டினர்; அமைச்சர் பதவிக்கு தவங்கிடக்கும் திரு. தியாகராசா பா. உ. இதை அறிந்தவுடன் சந்நதம் கொண்டார். பூசாரி அமைச்சர் உருவேற்றிவிட ஆடினார் ஓடினார் சாடினார் தினபதியுடன் கூடினார்.

தினபதி செய்த கைங்கரியத்தைக் கண்டவுடன் தினகரனுக்கு வயிற்றெரிச்சல் உண்டாயிற்று. தமிழ் அமைச்சரைப் பிரீதிப்படுத்த வேறு வழியின்றி ஊர்காவற்றுறைப் பா. உ. கூறியதாக (அறிக்கையொன்று) ''ஒப்பந்த அடிப்படையில் ஒத்துழைக்க ஆயத்தம்'' என்ற தலை அங்கத்துடன் ஒரு ஓலச் செய்தியை தனக்குத்தெரிந்த பாணியில் சரிக்கட்டி வெளியிட்டது.

திரு. இரத்தினம் அவர்கள் வேலணையில் நடந்த மாபெரும் கூட்டத்தில் ''தினகரனின்'' சூழ்ச்சியை எடுத்து விளக்கினார்; பொய்ச் செய்திகளைப்போடும் தினகரனைத் தாம் மேடைகளில் கண்டித்துவருவதால் தம்மைச் சூழ்ச்சிவலையிற் சிக்கவைக்க தினகரன் முயன்றது. செய்தி கேட்டவரிடம் ''சேட்டை விடாதீர்கள்'' என்று கூறியதாகவும் தாம் கூறியதைப் பொருட்படுத்தாது இந்தச் செய்தியை வெளியிட்டு இப்பொழுது வம்புச்சேட்டை செய்திருக்கிறது என்றும் திரு. இரத்தினம் கூறினார்.

அப்பொழுது அவருடைய கையிலிருந்த தினகரன் பிரதியை ஆத்திரங்கொண்ட இரண்டு இளைஞர்கள் வாங்கித் தீமூட்டினார்கள். தேர்தலுக்கு முன் தினகரன் சேட்டைவிட்டு புங்குடுதீவில் எரிக்கப்பட்டது. இப்பொழுது இங்கு இரண்டாவது முறையாக இங்கு எரிக்கப்பட்டுள்ளது.

## வாசகர் கருத்து

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வரை இப்பாடலே விடுதலை உணர்வூட்டும் தேசியப்பாடலாக அமைய வேண்டும். அதன்பின் ஏற்படும் அரசியல் நிலைக்கேற்பப் புதிய தேசிய கீதம் பற்றிய ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம். அந்த நாள் வெகு தொலைவில் இல்லை என்பதனைச் சமகால அரசியல் நிலை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

வாழ்க ஈழம்!

வாழ்க ஈழத் தமிழகம்!!

இ. ம. பி. நடேசபிள்ளை

கனுவாஞ்சிகுடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் புறக்கணிப்புக் கண்காட்சி

# தமிழ் துரோகிகள் நடுக்கம்

## தியாகராசாவின் திருவிளையாடல்!

வேலணையில் நடைபெற்ற தமிழ்ப் புறக்கணிப்புக் காட்சியைத் தடுப்பதற்கு 'வட்டுக்கோட்டை வால்' திரு. ஆ. தியாகராசா எம். பி. பல முயற்சிகள் செய்தார். ஆம்; நன்றாக சோடிசேர்த்தீர்கள். தமிழ்மொழிப் பிரமாணங்களை எதிர்த்த இரத்னசாரதேரோவுக்கு அருகில் நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு தமிழ்மொழிப் புறக்கணிப்புக்காட்சியை எதிர்த்த தமிழ்த் துரோகி திரு. தியாகராசா பல்லாற்றானும் தகுதி உடையவரே!

திரு. தியாகராசா வேலணைக் கிராமசபை எப்படி தன்னுடைய மண்டபத்தை இக்காட்சிக்குக் கொடுக்கலாம். இந்தக் கிராமசபைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி' அரசாங்க நிருவாகம் உள்ளூர் ஆட்சி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருக்கும் அவசரமாகத் தந்தி அனுப்பினாராம். நல்ல அடிமைகள் எசமானைப் பிரீதிப் படுத்த என்ன செய்ய மாட்டார்கள்! மந்திரிப்பதவி ஆசை சும்மா இருக்க விட்டு விடுமா?

கொள்ளுப்பிட்டியில் இரத்தினசாரதேரோவின் நினைவுச் சின்னத்துக்கும் தியாகராசா நினைவுச் சின்னத்துக்கும் இடையில் நடுநாயகமாக இலங்குதற்குத் தம்மைத் தயார்செய்கின்றாராம் அமைச்சர் செ. குமாரசூரியர். தமிழ்ப் புறக்கணிப்புக் காட்சிக்கு அழைக்கப்பட்ட அமைச்சர்களில் அவரும் ஒருவர்! வேலணைத் த: அ: க: வாலிப முன்னணிகள் அவரைத் திறந்துவைக்குமாறு கேட்டுக் கௌரவித்தன. திறந்துவைப்பதை மூடிவைக்க அவர் முயன்றாராம்.

திரு. தியாகராசாவும் புங்குடுதீவுக் கதிரவேலுவின் தரகர் ஒருவரும் நாரந்தனைச் சிங்களக் கட்சியின் உத்தியோகத்தர் ஒருவரும் அமைச்சர் குமாரசூரியர் இல்லத்தில் கூடி தமிழ்ப் புறக்கணிப்புக் காட்சியைத் தடுக்க என்ன செய்யலாம் என ஆராய்ந்து பல திட்டம் தீட்டினார்களாம். வேறு சில அமைச்சர்களையும் கலந்தார்களாம். கடைசியாக வேலணையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்துக்கு இ. போ. ச. விசேட பஸ் சேவை செய்யாமல் தடுக்கவேண்டுமென முடிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டதாம். இந்தச் செய்திகளை ஒரு 'குஞ்சு' தன் வீரப்பிரதாபங்களை அவிட்டு விட்டபொழுது வெளி விட்டது!

## நான் கைதி...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கிறது— அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஜனநாயக உரிமைகள் மரபுகள் எல்லாம் பறிக்கப் பட்டுவிட்டன. ஆகவே தகவல் தந்தவர் பெயரை நீங்கள் கூறத்தான் வேண்டும்.''

'மன்னிக்கவும், அவசரகாலச் சட்ட விதிகளுக்கு பின்வாங்கி பத்திரிகையாளர்களின் உரிமைகளை நான் விட்டுக் கொடுத்துவிடமுடியாது.'—இது நான்.

''அப்படியானால் முடிவாக என்ன கூறுகிறீர்கள்?''

''என் முடிவைக் கூறிவிட்டேன்—இனி முடிவு எடுக்க வேண்டியது உங்கள் கைகளில்தான்.'' இப்படி அடக்கத்துடன் கூறினேன்.

''சரி, உணவருந்திவிட்டு, மீண்டும் நன்றாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வாருங்கள்.''

இத்துடன் எஸ். பி.யுடன் நடத்திய உரையாடல் முடிவடைந்தது—

இப்போது நேரம் மாலை 4-30.

'இறுதியாக உங்கள் முடிவு என்ன?' இப்படிக் கேட்டார் ஏ. எஸ். பி.

''எங்கள் முடிவில் மாற்றம் எதுமில்லை''— இவ்வாறு என் சார்பில் பதிலளித்தார் விவேகானந்தன்.

''அப்படியானால் உங்களை உடனே 'ரிமாண்ட்' செய்யப்போகிறோம்.''

''அப்படியா? மகிழ்ச்சி...!''

இதன்பின் வழக்கறிஞர் விவேகானந்தனின் ஆலோசனைப்படி புதிய வாக்குமூலம் ஒன்று கொடுத்தேன். அவ்வாக்குமூலத்தில் நான் சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியர் மட்டுமே என்றும், வெளியிடுவதும், பிரசுரிப்பதும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் எனும் ஸ்தாபனம் என்றும் தெரிவித்தேன். இது சி. ஐ. டி. அதிகாரிகளுக்கு புதிய குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது! சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் என்ற ஸ்தாபனத்தைப் பற்றிய தகவல் அறியவேண்டிய புதிய 'வேலை' அவர்களுக்கு இப்போது வந்துவிட்டது!

மணியோ மாலை ஐந்து அப்போது!

இதனால் என்னை என்ன செய்வது என்ற பிரச்சினை வேறு அவர்களுக்கு...!

என்னை வெளியே விடவும் இஷ்டமில்லை!

இறுதியில், கொள்ளுப்பிட்டி பொலீஸ் லாக் அப்பில் 3-11-70 இரவு முழுவதும் அடைத்து வைப்பது என்று முடிவு செய்தார்கள்!

ஆம், கொள்ளுப்பிட்டி பொலீஸ் ஸ்டேசனிலுள்ள 2ம் நம்பர் லாக் அப் சிறையில் மாலை 5-15க்கு தள்ளப்பட்டேன்.

—வளரும்;

## புதிய வழக்கறிஞர்

வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த நாகேந்திர மடத்திலுள்ள திரு. வல்லிபுரம் மயில்வாகனம், உயர் நீதி அரசர் திரு. ஜீ. ரீ. சமரவிக்கிரமா முன்னிலையில், உயர் நீதி மன்றத்து வழக்கறிஞராக, அண்மையில் சத்தியப்பிரமாணஞ் செய்து கொண்டார்.

இவர் அரசாங்க எழுதுவினைஞராக இலங்கையின் பல்வேறு நீதிமன்றங்களிலும் கடந்த பதினைந்து வருடங்களாகக் கடமை ஆற்றினர். அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் கடமையாற்றுங்கால், உத்தியோக மொழிச் சட்டத்தின் கீழ் இளைப்பாறி உள்ளார்.

1970ம் ஆண்டு நடைபெற்ற இறுதித் தேர்வில், முதலாம்வகுப்பிற் சித்தி எய்தியதுமன்றி, மரண தத்துவ சட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று, திரு. என். ஈ. வீரசூரியா பரிசையும் பெற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில் ஆரம்பிக்கப் போகும் இவர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவரும், இளைப்பாறிய அராலி இந்துக் கல்லூரி உப அதிபர் திரு. வே. கந்தர் மயில்வாகனத்தின் மருமகனும், நாகேந்திர மட உப தபாலதிபர் திரு. க. சிவஸ்கந்தாவின் மைத்துனருமாவார்.

## தமிழுணர்ச்சி...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகப் பேசியிருக்கிறார். இந்த அரசாங்கம் அந்தக் கொள்கையுடையதாக இப்பொழுது மாறி விட்டது என்றுதான் நான் நினைக்கிறேன். அல்லது, ''அண்ணா பற்பொடி'', ''அண்ணா காப்பி'' என்று அண்ணாவின் பெயரைப் பயன் படுத்துவது போல, அரசியலுக்கும் சிலர் பயன்படுத்துகிறார்களோ தெரியவில்லை.

### தமிழ் படத்திற்கு அரசு உதவவேண்டும்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை இருக்கிறது என்று திரைப் படங்களைத் தடுக்கக் கூடாது. அமைச்சர் கூறியதுபோல அந்தப் படங்களில் நல்ல சமதர்மக்கொள்கைகள் அமைந்திருக்கின்றன. ஏழைகள் வாழவேண்டும்; பணக்காரர்கள் தாழவேண்டும்; ஏழைகளுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பன போன்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் கொண்ட படங்களை தடைசெய்யும் நோக்கத்துடன் இறக்குமதியைக் கட்டுப்படுத்தக் கூடாது.

இந்த நாட்டிலே தமிழ்ப் படங்களை உற்பத்திசெய்கிறவர்களுக்கு ஒரு பெரிய குறைபாடு இருக்கிறது. சிங்களப் படங்கள் பல படமாளிகைகளிலே ஏறக்குறைய நூற்றுக்கு எண்பது, எண்பத்தைந்து வீதமான இடங்களிலே ஓடுகின்றன. தமிழ்ப் படங்கள் சில படமாளிகைகளில் தான் ஓடுகின்றன. இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டிலே ஏறக்குறைய நாலில் ஒரு பாகத்துக்கு மட்டுமே சில படங்களைத் தயாரித்துக் கொடுத்தால் அது கட்டுமா என்பது ஒரு கேள்வி. எனவே, சிங்களப் படத்துக்குக் கொடுக்கும் பண உதவியை விட அரசாங்கம் தமிழ்ப் படத்துக்கு பண உதவி கூடக் கொடுக்க வேண்டும். அப்படி தமிழ்ப் படங்களுக்குப் பண உதவியைக் கூடுதலாகக் கொடுத்துவிட்டால், சிங்களப் படத்துக்குக் கொடுப்பதிலும் கூடக் கொடுத்து விட்டார்கள் என்று தீவிரவாதிகள் அதைப் பயன் படுத்தி அரசாங்கத்தைக் கண்டிக்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. தமிழ்ப் படங்கள் சில இடங்களுக்குத்தான் போகின்றன. சில இடங்களிலே தான் காட்டப்படும். எனவே சிங்களப் படங்களின் மூலம் வரும் வருவாயில் மூன்றில் ஒன்று, நான்கில் ஒன்றைத் தான் இந்த நாட்டிலே உற்பத்தியாகும் தமிழ்ப்படங்கள் பெறமுடியும். அப்படியானால், தமிழ்ப்படங்களைத் தொகையாக இந்தக் கூட்டுத்தாபனம் ஆக்குமா? எனவே இந்த நிலைமை வரும் வரைக்கும், போதிய முதல் இந்தக் கூட்டுத்தாபனத்துக்குக் கிடைக்கும் வரைக்கும் தென்னிந்தியாவில் இருந்து வரும் படங்களைத் தடுப்பது புத்தியல்ல.

தமிழ்ப் படங்களைச் சிறப்பாக எடுக்க வேண்டும்; தமிழ்ப் படங்கள் பெருக வேண்டும். தமிழ்ப் படங்களை இலங்கையிலிருந்து இந்தியாவுக்குக்கூட ஏற்றுமதி செய்ய வேண்டும். நல்ல தமிழ்ப் படங்களை ஆக்கினால் சிங்களப் படங்களைக்காட்டிலும் அவற்றிற்கு வெளிநாடுகளில் நல்ல சந்தை இருக்கிறது. பர்மா, மலேசியா, மொரிசஸ், தென்னிந்தியா, பிஜி தீவு, ஆகிய நாடுகளிலே எல்லாம் தமிழ்ப் படங்களுக்கு நல்ல சந்தை பெற முடியும். ஆகவே தமிழ்ப் படங்களை நல்ல முறையிலே இந்நாட்டில் உற்பத்தியாக்க வேண்டும். அதற்கான ஊக்குவிப்புகளை அரசாங்கம் கொடுக்க வேண்டும்.

## ராகலையில் இ. தொ. கழக கூட்டம்

ராகலை சூரிய காந்தித் தோட்டத்தில் 11-3-71 பி. பகல் 1மணிக்கு இ.தொ. கழக பிரசாரக் கூட்டமொன்று நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் தமிழரசுத் தலைவர்கள் உரையாற்றுவார்கள்.

—

## 'பல்கலை' மீண்டும் வெளிவருகிறது!

தமிழரசுக்கட்சியின் எரிதழல் பேச்சாளரும் முன்னாள் தீப்பொறி ஆசிரியருமான திரு எம். கே. அந்தனிசில் அவர்களது 'பல்கலை' ஏடு மீண்டும் வெளிவரவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளில் திரு. அந்தனிசில் இப்போது ஈடுபட்டுள்ளார்.

—

## தமிழ் மொழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குவதாக குமாரசூரியர் கூட்டம் தமிழ்மக்களை ஏமாற்றிவருவது ஏன்?

அரசாங்கத்தின் சோசலிசம் என்பதற்கு பீலிக்சின் பதிலும் தக்க எடுத்துக்காட்டாக திகழுகிறது.

## ஈழவேந்தன்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வது வடித்தெடுத்த உங்கள் அடிமைப் புத்தியை அன்றே எடுத்துக்காட்டுகிறது என்று இடித்து இடித்து ஈழவேந்தன் கேட்ட கேள்விகள் கூட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. இப் பொருள் பொதிந்த கேள்விக்கு விடை கூற முடியாது தத்தளித்த சிவத்தம்பி அவர்கள் ''சிங்கள ஆதிக்கம் ஒன்று இருப்பதாக தான் நம்பவில்லை'' என்றார். இதை நீங்கள் எல்லோரும் அறிய வெளிப்படையாக கூறும் நிலையை உருவாக்கி எள்ளி நகையாடத்தக்க உங்கள் அடிமை மனப்போக்கை தமிழ் மக்கள் அனைவருக்கும் புட்டுக்காட்டவே இக்கேள்விகளைக் கேட்டேன். இவ் வாய்ப்பைத் தந்த உங்களுக்கு என் நன்றி என்று திரு. ஈழவேந்தன் பொருள் தொக்கி நிற்கும் முறையில் கிண்டலாகக் கூறியபோது அவையோர் ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

## தொல்பொருட்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியில் கொந்தளிப்பான நிலைமையை உருவாக்கி வருகிறது. இக் கொந்தளிப்பு எந்நேரமும் பீறிட்டு பாயலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

தமிழுக்கும் இடமளிக்குமாறு கோணை நகர்த் தமிழ் மணி இயக்கம் அரசாங்க அதிபரோடு தொடர்பு கொண்டபோது நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த அரசாங்க அதிபரும் இதுவரை நடவடிக்கைகள் ஏதும் எடுத்ததாகத் தெரியவில்லை. திருமலையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தமிழ்க்கலாச்சாரப்பொருட்கள் எவற்றையும் பார்வைக்கு வைக்கப்படாத அச்சாலையில் தனிப் பௌத்த சின்னங்களை மட்டுமே வைத்திருப்பதோடு, பிரதான அறையொன்றில் பௌத்த கொடிகள் இரண்டும் வைக்கப்பட்டிருக்கின்றன. வாசலில் உள்ள பலகையொன்றில் மாத்திரம் 'பொருட்களைத் தொடாதீர்' என்ற தமிழைக் கண்டு தமிழர்கள் என்ன திருடர்களா எனக் கேட்கின்றார்கள் பொது மக்கள்.

—

## ஈழநாடு ஆசிரியர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

—மேற்கண்டவாறாக ஈழநாடு ஆசிரியர் மீது குமாரசூரியர் பாய்ந்து எரிந்து விழுந்ததாக தெரிகிறது.

—

## தமிழ்மொழி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்க சேவையில் சேரவும் உரிமை இருக்க வேண்டும்.

பேச்சுவார்த்தை முடிவில் இக்கோரிக்கைகளை குறித்துக் கொண்ட பிரதமர் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து முடிவு கூறுவதாக தமிழரசுத் தூதுக்குழுவுக்கு உறுதியளித்ததாக தெரிய வருகிறது.

—இந்தப் பேச்சுவார்த்தையின் போது பேசப்படாத பல விடயங்களை தம் இஷ்டம் போல் கற்பனையில் சிருஷ்டித்து ஈழநாடு, வீரகேசரி ஆகிய பத்திரிகைகள் பிரசுரித்துள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## எழுச்சிபெற்ற தமிழகத்தில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

காட்சியும் மனுநீதிச் சோழன் பசுவுக்கு நீதி வழங்கிட தன் மைந்தனை தேர்க்காலில்போட்டு நெரித்த காட்சியும் உள்ளத்திலே நிரம்பி வழிந்தது.

மணிவாசகரும், சுந்தரரும், ஞானசம்பந்தரும், அப்பரும் வள்ளலாரும், பட்டினத்தாரும் ஆத்மீகம் வளர்த்த சீர்மிகு காட்சி இதயத்தை புல்லரித்திடச் செய்தது.

இதற்கெல்லாம் மேலாக — அன்றிருந்தது போன்ற பண்டைத் தமிழகத்தை — செழுமையான தமிழ் நாட்டை — மீண்டும் உருவாகிடத் துடிப்புடன் பணியாற்றிவரும் திராவிட முன்னேற்றக் கழகம் தெரிந்தது. உலகத்தமிழர்களின் விடிவெள்ளியாக பேரறிஞர் அண்ணா காட்சி தந்தார்.

ஆம், புதிய தமிழகம்—தனித்தமிழகம்— விரைவில் உருவாகும்; உலகப்படத்தில் தமிழனுக்கு தனிநாடு ஒன்று ஏற்பட்டே தீரும்; தமிழ் கொடி பறந்தே தீரும்; என்ற உறுதியான நம்பிக்கையுடன் ஈழம் திரும்பியிருக்கிறேன்—

எனது தமிழகப் பயணம் பற்றி விரிவான தொடர் கட்டுரை எழுத வேண்டுமா என்பது பற்றி ஆலோசித்து வருகிறேன். இது பற்றி உன் கருத்தினை எழுது.


உன்
அன்புத்தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!



செல்லமகால் நெல்சன் (திருமலை) இம்பீரியல் (மட்டுநகர்)

நடிப்புலகமேதை சிவாஜிகணேசன் ஆடலழகி ஜெயலலிதா

பத்மினி டி. எஸ். பாலையா நம்பியார் சுந்தரராஜன்

மற்றும் பயாஸ்கோப்பு படம் காட்டும்

கே. ஏ. தங்கவேலு நடித்த

# குருதட்சணை

கதை வசனம் டைரக்ஷன்:— ஏ. பி. நாகராஜன்.

---

கல்கியில் 'சோ' எழுதிய யாரோ அவர் யாரோ தொடர்கதை

## 3வது வெற்றி வாரம்

கிங்ஸ்லி — பிளாஸா

ஜெய்சங்கர் வாணிஸ்ரீ சோ மனோரமா M. R. R. வாசு

— நடித்த —



# ஆயிரம் பொய்

இசை: V. குமார் டைரக்ஷன்: ஸ்ரீனிவாசன்

---

## 58வது வெற்றி தினம்

கெப்பிட்டல் (கொழும்பு) வெலிங்டன் (யாழ்நகர்)


விஜயா (மட்டுநகர்)

* நடிகர்திலகம் சிவாஜிகணேசன்
* காஞ்சனா * எம். என் நம்பியார்
* நாகேஷ் * எஸ்.வி. ரங்காராவ் நடித்த

ஸ்ரீதரின்

# சிவந்த மண்

கதை-வசனம்-டைரக்ஷன் ஸ்ரீதர்



விரைவில் எதிர்பாருங்கள் ராமண்ணாவின்

# மூன்றெழுத்து

(கலர்)

---

## 2வது மாதம் வெற்றி நடை போடுகிறாள்

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்) ஓடியன் (கண்டி)

— ஆகியதிரைகளில் —

* நடிகர்திலகம் சிவாஜிகணேசன்
* ஜெயலலிதா * பாலாஜி * நாகேஷ்
* சுந்தரராஜன்

— நடித்த —

சுஜாத்தாவின்

# எங்கிருந்தோ வந்தாள்

(ஈஸ்ட்மென் கலர்)

---

## எமது அடுத்த வெளியீடு

* நடிப்புலக மாமேதை சிவாஜிகணேசன்

கே. ஆர். விஜயா

நம்பியார்

மற்றும் பலர் நடித்த

'அருண் பிரசாத் மூவிஸ்'



# ராமன் எத்தனை ராமனடி

டைரக்ஷன்—தயாரிப்பு: பி. மாதவன் (பி. ஏ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1971-ம் வருடம் பங்குனி மாதம் 11-ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது. —ஆசிரியர்: கோவைமகேசன்